விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 07 சனிக்கிழமை (21.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 033

# காணாமல்போனோர் தொடர்பில் யாரும் பொறுப்புக் கூற முடியாது

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு), பயங்கரவாத நடவடிக்கைகளில் காணாமல்போனோர் தொடர்பில் அரசாங்கமோ அல்லது இராணுவமோ பொறுப்புக் கூறாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தின்போது உயிரிழந்த மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 217 இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு உத்தம பூஜா பதக்கங்களை வழங்கும் நிகழ்வு



நேற்று வெள்ளிக்கிழமை மாத்தளை, கொஹொலந்வெல (19ஆம் பக்கம் பார்க்க)

## 30 ஆயிரம் லஞ்சம் பெற்றார் யாழ்.கட்டளை தளபதி

### பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத் தளபதியாக தற்போது பணியாற்றுபவர், போர் இடம்பெற்ற காலப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கொழும்புப் பொறுப்பாளரிடமிருந்து மாதாந்தம் 30 ஆயிரம் ரூபாயினை இலஞ்சமாக பெற்று வந்ததாக முன்னாள் படைத்தளபதி சரத் பொன் சேகா நேற்று குற்றம் சுமத்தியுள்ளார்.

படைத்தரப்பினருக்கான ஆயுத கொள்வனவின்போது, ஹைகோப் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் ஊழல்கள் தொடர்பிலான வழக்குக்காக நேற்று கொழும்பு மேல் நீதிமன்றுக்கு பலத்த பாதுகாப்புடன் சரத் பொன்சேகா (19ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரட்டைக் கொலை

வவுனியா மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பன்றிக்கெய்தகுளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கணவன் - மனைவி ஆகிய இருவரும் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இப்பகுதியில் கொட்டகை அமைத்து விவசாயம் செய்து வந்த கந்தையா முத்தையா (வயது 67), அவரது மனைவி (19ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது. கிருஸ்ணாவிடம் அடித்துக் கூறிவிட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கமுடியாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியலமைப்பின் 13 வது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வு காணத் தயாராக இருப்பதாகவும் கிருஸ்ணாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவை திருமண நிகழ்ச்சி ஒன்றில் நேற்று முன்தினம் சந்தித்த போதே மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது என இந்தியாவிடம் (19ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க தூதரக அதிகாரிகள் குழு யாழ். அரச அதிபரை நேற்று மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

அமெரிக்க தூதரக அரசியல் ஆலோசகர் கலாநிதி போல் எம். காட்டர்,யு.எஸ்.எயிட் திட்டத்தின் பணிப்பாளர் ஜேம்ஸ் பெக்னார், ஜனநாயகம், மனிதவுரிமை, தொழிலாளர் அமைப்பின் பிரதிச் செயலாளர் தோமஸ் ஓ மெலியா, தெற்கு மற்றும் மத்திய ஆசிய அரசியல் விவகாரச் செயலாளர் அலிசா உள்ளிட்ட ஆறு பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ். மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை யாழ். மாவட்ட செயலகத்தில் நண்பகல் 12.00 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினர். அமெரிக்க தூதுரக அதிகாரிகளுடனான சந்திப்பு தொடர்பாக யாழ். அரச அதிபர் கூறுகையில், மீள்குடியேற்றம் தொடர்பாகவே அதிகளவில் என்னிடம் கேட்டிருந்தனர். குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றம் எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது எனக் கேட்டிருந்தனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவும் அமெரிக்காவும் இறுதி யுத்தத்தை பார்வையிட்டன

### விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு

இறுதிக் கட்ட யுத்தத்தை இந்தியாவும் அமெரிக்காவும் செய்மதி மூலம் பார்வையிட்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்த குறிப்பில் இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2009 ஆண்டு மே மாதம் 5ம் திகதி தூதரக அதிகாரி ஜேம்ஸ் ஆர் மூர்ஸ் அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் நடத்திய சந்திப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் உயிரிழப்பு குறித்து சுயாதீனமான மதிப்பீடுகளை நடத்தமுடியாத போதிலும் பலர் உயிரிழந்திருக்கக் கூடும் என மூர்ஸ், வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகமவிடம் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## சிக்கலில் கிருஸ்ணா

(பெங்களூர்)

கர்நாடாகாவில் கனிமவள சுரங்க முறைகேடு தொடர்பான சர்ச்சையில் இந்திய மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவுக்கு சிக்கல் முற்று கிறது. இதற்கிடையில் அந்த மாநி லத்தில் உள்ள சித்ராகலா அமைப்புநிதியை முறைகேடாகபயன்படுத்தினார் என்ற குற்றப் புகாரும் எழுந்திருக்கிறது இந்த மாநிலத்தில் கிருஸ்ணா முதல்வராக இருந்த காலத்தில் சுரங்க முறைகேடு நடந்திருப்பதாகவும்,இது குறித்து லோக் அயுக்தா நீதிமன்றம் விசாரித்து வருகிறது.

இந்த விசாரணையை நிறுத்தி வைக்க (19ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சரவணபவன் ஆகியோர் இணைந்து திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

இலவசம்
மருத்துவ சான்றிதழ்
புகைப்படம்
L-BOAD

நியூ நெல்சன் லேணர்ஸ்



அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் 2012 21, 22, 23ம் திகதிகளில் உங்களுக்காக நாம்

கண்காட்சியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு பதிவு செய்யும் அனைவருக்கும்,

மருத்துவச் சான்றிதழ் | புகைப்படங்கள் அத்தோடு L-BOAD | கட்டணம் இலவசம்

கிளைகள்

இல.127, பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. தொ.பே.இல: 021 492 3115

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி. தொ.பே.இல: 021 492 3114

இல.89, கண்டிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 2224527, 0773581916

வருக பயன் பெறுக

(7336)

# மூக்குக்கண்ணாடி வியாபாரத்தில் மூக்கை நுழைக்கும் வைத்தியர்கள்

## யாழ்.வணிகர் கழகம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில்பணிபுரியும்சிலவைத்தியர்களும், ப்ரிசோதகர்களும், வணிகர்களின் மூக்குக்கண்ணாடி வியாபாரத்தில் மூக்கை நுழைப்பதாக யாழ். வணிகர் கழகம் குற்றம் சுமத்தியுள்ளது.

யாழ். வணிகர் கழகத்தில் நேற்று நடைபெற்ற வணிகர்களுக்கான திடீர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குற்றம் சுமத்தப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் கண்சிகிச்சை வைத்தியர்கள் மற்றும் கண் பரிசோதகர்கள் தங்களிடம் வரும் கண் நோயாளிகளினை பரிசோதித்துவிட்டுகுறிப்பிட் விற்பனை நிலையத்தில் மட்டுமே கண்ணாடியை கொள்வனவு செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

அவ்வாறுசெய்யாதவர்கள்திருப்பி அனுப்பி விடுகின்றனர். சில வைத்தியர்கள் சொந்தக் கடை நடத்தி வருகின்றனர் சிலர் வியாபாரிகளுடன் ஒப்பந்தம் செய்து தரகைப் பெற்றுவருகின்றனர். இதனால்ஏனைய வணிகர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

வைத்தியர்களினால் குறிப்பிடப் படும் கடைகளில் கண்ணாடிகளின் விலை உச்ச அளவில் காணப்படுகின்ற போதும் அந்த இடத்துக்கே மக்கள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்படும் இடங்களில் காணப் படும் கண்ணாடிகளின் தரத்தில் எமது கண்ணாடிகள் காணப்படுகின்ற போதும் வைத்தியர்களும், பரிசோதகர்களும் எமது கண்ணாடிகளைஏற்றுக் கொள்கின்றனரில்லை.

இதனால் நோயாளர்கள் இவர்களிடம் அதிகளவான தொகையினைக்கொடுக்கவேண்டிஏற்படுகின்றது.

இப்பிரச்கினை தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப் பாளரிடம் முறையிடவுள்ளதாகவும் இம் முறைப்பாட்டு வெற்றியளிக்காவிடின்இது தொடர்பான அமைச்சிடம் முறையிடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (எ-4)


O/L,A/L மாணவர்களுக்கும்,
வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கும்,
வேலைவாய்ப்பை எதிர்பார்ப்போருக்கும்,
தொழில் புரிவோருக்குமான விசேட கற்கைநெறி

**Certificate in Multi IT**

**Courses**

1. Introduction to Computer with Parts Identification
2. Windows Installion & Software Installion, Operating System
3. Typing Practices (Note pad, Ms word )
4. Printing Technology and scanning
5. CD/DVD Writing Methods
6. Video, Audio Converting
7. Home Vedio Editing
8. Internet & e - mail (Face Book, Skype, e-mail,Net call)
9. Card Designing(ETC)

Duration
Batch i - One Week
Batch ii - 1Month

வரையறையற்ற செய்முறைப்பயிற்சி, மாணவர் மீது தனிப்பட்ட கவனம்,
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்,
நன்கு அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

தமிழ்மொழி விளக்கத்துடன் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி பற்றிய முன்னறிவோ ஆங்கில அறிவோ தேவையற்றது.

ஆர்வம் ஒன்றே போதுமானது...

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் – Batch i - 21.01.2012 -2 Am
Batch ii - 23.01.2012 -9 Pm

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444



## Vacancy

IDM Nations Campus is the Premier higher education institute in Sri lanka and is focused in providing Quality education in IT, English, Business Management and Soft skills to the Nations.With this Objective, Orient Academy has expanded its service with the current growth of Business the company requires to fill the following vacancy for the mentioned location.

Lecturers
(Information Technology & Business Management)

Requirements
Recognized Qualification in the relevant field (IT & Business Management) and experience in Similar industry will be an added advantage

Apply via- email or by post with complete Curriculum Vitae Of two non- related referees, before 5th February

IDM
IDM Nations Campus
Chavakachcheri Branch
No,5 1/1 Kandy Road, Chavakachcheri
Tel: 021 7 200 600, E- mail: idmchava@yahoo.com



"கற்பவை கற்க; கற்பவை கசடறக் கற்க"

YAALH ENGLISH ACADEMY

நிறுவுநர் + ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

**Practical English Courses**

- ஆசிரியர்க்கு
- உத்தியோகத்தர்க்கு
- உயர்கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- தாய்மார்க்கு: உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.

ஆரம்பம்: 21.1.2012 / இலவசம்: முதலிரு வகுப்புக்கள்

முழுவிபரங்கள் பெற + பெயர் பதிவு செய்ய : 077 3212 711

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ் நகர்
(7044)


## முன்னோடி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வின் முன்னோடி நிகழ்வான ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும், பெண்களுக்கானதுவிச்சக்கரவண்டிப் போட்டியும் நாளை 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.45 மணிக்கு கல்லூரிமுன்றலில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் மு.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரி முன்னாள் உப அதிபர் திருமதி குணமணி சண்முகதாஸ் கலந்து சிறப்பிக்கின்றார்கள். (எ)


## முகவரி மாற்றம்

இல.59, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் இருந்த கொக்குவில் ஏ.பி. விளையாட்டுக்கழகம் ரவி ஆட்ஸ், கே.கே.எஸ். வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

தலைவர் :-
கொக்குவில் ஏ.பி. விளையாட்டுக் கழகம். (அ-5612)



வர்த்தகப் பிரிவு
2012 A/L
கணக்கீடு - D.SAM
வணிகக்கல்வி - B.S.பசில்
பொருளியல் - S.S. சிறி
ACA சுன்னாகம்
(5588)


# விவசாய பீடத்தை மீள இயங்க வைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)

அறிவியல்நகர்கட்டடத்தொகுதியை மீள் நிர்மாணம் செய்து யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தை மீள இயங்க வைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடபதிவாளர்தெரிவித்துள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடமானது கிளிநொச்சி பிரதேசத்தில் காணப்பட்ட போர்ச்சூழல் காரணமாக 1997 ஆம் ஆண்டு தற்காலிகமாக இடம்பெயர்ந்து திருநெல்வேலியில் உள்ள மருத்துவ பீடத்தின் ஒரு பகுதியிலும் வேறு சில தனியார் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றது.

நாட்டில் காணப்பட்ட போர்சூழல்கள் முடிபடைந்த பின்னர் விவசாய பீடத்தை மீண்டும் நிரந்தரமாக கிளிநொச்சியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து யாழ்.பல்கலைக்கழகம் மேற்கொண்டுவந்தது.

இந்நிலையில், கடந்த வருட பிற்பகுதியில் ஜனாதிபதியின், விசேட பணிப்புரையின் பேரில் கிளிநொச்சி அறிவியல்நகரில்முடிவுறாநிலையில் இருந்த கட்டிடத்தொகுதியில் புனரமைப்பு வேலைகளை நிறைவுறுத்தி விவசாயபீடத்தை மீள் இயங்கவைக்கவும் அதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை புதிதாக அமைக்கும் வரை அறிவியல் நகரில் தற்காலிகமாக பொறியியல் பீடத்தை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தினால் அறிவியல்நகர்கட்டடத்தொகுதியினை மீள் நிர்மாணம்செய்வதற்கானசெலவு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டதன் மேல் உயர்கல்வி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரம் நேற்று முன்தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அறிவியல் நகர் கட்டடத்தொகுதியை 393.79 மில்லியன் ரூபாய் செலவில் மீள் நிர்மாணம் செய்து விவசாயபீடத்தை மீள இயங்கவைக்க அனுமதி அளிக் கப்பட்டுள்ளது.

எனினும் இன்று (நேற்று) வெளியாகியுள்ள யாழ். குடாநாட்டுப்பத்திரிகைகள் அனைத்திலும் தவறுதலாக கிளிநொச்சியில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அமைப்பதற்காக 393.79 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டினை அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதாக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றுள்ளது. (ச)


'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்
(7239)



**The Following Vacancy is invited for a Local NGO in Jaffna: Position: Counselors (Two)**

**Educational Qualification and experience:**

- GCE advance level & Diploma in Counseling from a recognized institution
- Previous experience is preferred.
- MS office in computer.

Applications including contact number for the above mentioned position is invited By Registered post within 07 days of this advertisement to the following address: A.N. Sinnathurai , Chairman CACPD (Itham), No.63, Maruthady road, Jaffna . No personal contact and the selected candidates only will be called for the interview. (7330)



**Spoken English for Personality and Professional Development - 6 months Training starts on Thursday, Feb 2nd**

ஆறு மாத காலத்தில் ஆங்கில மொழியை சரளமாகப் பேசப் பழகலாம். முறையான உச்சரிப்புடன் பேசவும், தொழிலுக்கேற்ற வகையில் பேச்சு வன்மை, எழுத்து வன்மை ஆகியவற்றை வளர்க்கவும் பயிற்றுவிக்கப் படும். அரச/அரசசார்பற்ற உத்தியோகத்தருக்கும், நிறுவனங்களில் வேலை தேடுவோருக்கும், பல்கலைக்கழக / வெளிவாரி மாணவருக்கும் உகந்த நேரத்தில் பயிற்சிகள், விபரங்களுக்கு 0773185108, 0714554872

52, Keeripalli Road (off Navalarmadam),
Karanavai East, Karaveddy.
Registration on 28 th January Saturday 9.30 a.m
(அ-5608)



தேசத்தின் வருங்காலத் தலைவர்களிற்கான வளமூட்டல் செயற்பாடு

Empowering Future Leaders Scholarship

**EFL Exam 2012**

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான EFL புலமைபரிசில் பரீட்சை

காலம் : 25/01/2012(புதன் கிழமை)
நேரம் : காலை 10மணி, மாலை 4மணி
இடம் : IDM சாவகச்சேரி (கொமர்சல் வங்கிற்கு அருகாமையில்)

**புலமைப்பரிசில் விபரம்**

For 100 Marks 50% புலமைப்பரீசில்
For 75-100 Marks 35% புலமைப்பரீசில்
For 50-75 Marks 15% புலமைப்பரீசில்

பரீட்சையில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் வருகையினை உறுதிப்படுத்த 0777666175 என்ற இலக்கத்திற்கு உங்கள் பெயர், முகவரி பிறந்த திகதி மாதம் வருடம் என்பவற்றை குறுஞ்செய்தி அனுப்பவும். குறுஞ்செய்தி கிடைக்கப் பெற்றவுடன் உங்கள் சுட்டிலக்கம் அனுப்பி வைக்கப்படும்.

**பரீட்சை பாடப்பரப்புக்கள்**

கணிதம்,பொதுஅறிவு,கணனி

**அனுமதி இலவசம்**

# இன்று ஒரு தகவல்

## முட்டாள் சனங்கள்

ஒரு பெரிய நினைவு மண்டபம். அதற்கு முன்னால் ஒரு அப்பாவும் பிள்ளையும் நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த வழியாக போகிறவர்கள், வருகிறவர்கள் அவ்விடத்திலே நின்று "அது என்ன மண்டபம் " என்று விசாரிக்க ஆரம்பித்தார்கள். அந்த அப்பாவும் பிள்ளையும்தான் வருகிற அனைவருக்கும் மண்டபத்தின் விபரத்தை சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது... ''இந்த இடத்திலே ஒரு பெரிய மகான் சமாதி ஆகியிருக்கிறார். அவர் சமாதியான இடத்திலே இந்த நினைவு மண்டபத்தை கட்டியிருக்கிறோம்" என்று கூறினார்கள்.

இந்த செய்தி ஊர் பூராகவும் பரவியது. அதிகமானவர்கள் அந்த இடத்தை தேடி வர ஆரம்பித்தார்கள். பார்ப்பதற்கு வருகிறவர்கள் எல்லோரும் வந்து சிறிது நேரம் உட்கார்ந்தால் மனநிம்மதி கிடைக்கிறது என்று கூறினார்கள்.

அதிலும் வைக்கப்பட்டிருந்த உண்டியலிலேயும் தமது காசினை போட்டு விட்டு சென்றார்கள்.

பணம் கிடுகிடுவென நிறைய சேர ஆரம்பித்தது.

பணம் நிறைய சேர ஆரம்பித்தும் அப்பாவுக்கும் பிள்ளைக்கும் இடையிலே தகராறு வந்து விட்டது.பணம் சேர்ந்தாலே சொத்து தகராறு வரத்தானே செய்யும்.

மகன் அடிக்கடி நிறைய பணம் கேட்க ஆரம்பித்தான்.

தகப்பனார் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு நாள் மகனைக் கூப்பிட்டார்.

"இதோ பார்... நமக்குள்ளே தகராறு வேண்டாம். அப்பாவும் பிள்ளையும் இப்படி அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டு இருந்தால் பார்க்கிறவர்கள் பிழையாக நினைப்பார்கள். அதனாலே இதை நாம் சமரசமாக தீர்த்துக் கொள்வோம். என்ன சொல்கிறாய்" என்றுஅப்பா கேட்டார்.

"சரி " என்று மகன் சொன்னான்.

உடனே தகப்பனார் மகனிடம் சிறிது பணத்தை கொடுத்தார். தன்னிடமிருந்த ஒரு கழுதையையும் கொடுத்தார்.

"இதை வைத்து நீ உழைத்துக் கொள்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

மகன் அந்தக் கழுதையை இழுத்துக் கொண்டு அடுத்த ஊருக்கு போனான். செல்லும் வழியிலே அந்தக் கழுதை இறந்து விட்டது. உடனே என்ன செய்யலாமென்று யோசித்தான். அந்தக் கழுதையை ஒரு வீதியோரமாகப் புதைத்தான்.கையிலே இருந்த பணத்தை வைத்து அந்த இடத்திலே ஒரு கல் மண்டபத்தைக் கட்டினான்.

அந்த வழியாக இரண்டு வழிப்போக்கர்கள் வந்தார்கள். இதுவென்ன மண்டபம் என்று அவனிடம் விசாரித்தார்கள்.

"இந்த இடத்திலே ஒரு பெரிய மகான் சமாதி அடைந்துள்ளார்" என்றான். இந்த செய்தி ஊர் பூராகவும் பரவி கூட்டம் இவ்விடத்திலே அலைமோத ஆரம்பித்தது.உண்டியலிலே பணம் நிறைய சேர ஆரம்பித்தது. நகையெல்லாம் கழற்றி காணிக்கையாக போட ஆரம்பித்தார்கள்.

தகப்பனை விட மகன் பெரிய நிலையை அடைந்தான். இதைக் கேள்வியுற்ற தகப்பனார் மகனை பார்க்க புறப்பட்டார். மகனின் வாழ்க்கையோ "ஓகோ " என்று இருந்தது.வீடு, வாகனம் என்றெல்லாம் அவனிடம் சேர ஆரம்பித்தது.

"எப்படியடா இந்த அளவுக்கு ஆளாகினாய்" என்று கேட்டார்.

''அப்பா, எல்லாம் உங்களின் ஆசீர்வாதம்தான். நீங்கள் வழங்கிய மூலதனத்தைத்தான் வைத்து இவ்வளவும் நடந்துள்ளது" என்று கூறினான்.

"அது எப்படி?'' என்று கேட்டார்.

''அப்பா... நீங்கள் ஒரு கழுதைக்குட்டியும் சிறிது பணமும் என்னிடம் கொடுத்தனுப்பினீர்கள். அதை எடுத்து கொண்டு வந்தேன். வரும் வழியில் கழுதை இறந்து விட்டது.அதை ஒரு இடத்தில் புதைத்து அதற்கு சமாதி கட்டினேன். வதந்தியைக் கிளப்பி விட்டேன். மக்கள் எல்லோரும் அந்த வதந்தியை கேட்டு ஏமாந்து போய் தாங்கள் உழைத்த பணத்தை கொண்டு வந்து உண்டியலில் போட்டார்கள்.

இதைக் கேட்ட தகப்பன் "இப்போது தான் நீ என் பிள்ளை" என்று கூறி சந்தோசப்பட்டார்.

"ஏன் இப்படி சொல்கிறீர்கள்" என்று மகன் கேட்டான்.

"கழுதைக்குட்டியை புதைத்து மண்டபம் கட்டியிருக்கிறாய்... ஏற்கனவே நமது ஊர்லே நாம் கட்டியிருக்கிற மண்டபம் இந்தக் கழுதையினுடைய அம்மாவை புதைத்த இடம். நானும் மகான் ஒருவர் சமாதியாகியுள்ளார் என்றுதான் கட்டினேன்" என்றார்.

முட்டாள் சனங்களை நினைத்து அந்த இரண்டு பேரும் சத்தம் போட்டு சிரித்தார்கள்.

மனிதனை மனிதன் ஏமாற்றுவது மிகவும் சுலபமான காரியம் என்பது இதிலிருந்து புலப்படுகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் வீதியில் இருந்த இரு வீதித்தடைகள் நீக்கம்

புதுக்குடியிருப்பில் இருந்து வள்ளிபுனம் வரையிலான வீதியில் இருந்த நான்கு வீதித்தடைகளில் இரண்டு வீதித்தடைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச 622 ஆவது பிரிகேட் படைத்தளபதி கேணல் வெலிகலவினால் நீக்கப்பட்டது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முல்லை. மாவட்ட மனித உரிமை பாதுகாவலர் யோகதாசன் யூட் மக்களின் சிரமங்களை எடுத்துக் கூறினார்.

இதனையடுத்து இவ்வீதித்தடை நீக்கப்பட்டது. இது விடயமாக 622 ஆவது பிரிகேட் படைத்தளபதியுடன் மனித உரிமை பாதுகாவலர் நேரில் சந்தித்து மேற்படி நான்கு வீதித் தடைகள் பற்றி குறிப்பிட்டதையடுத்து தேவிபுரம் மஞ்சள் பாலத்தடியில் இருந்த தடையும் வள்ளிபுனத்தில் முன்னர் செந்தளிர் சிறுவர் இல்லம் இருந்த பகுதிக்கு முன்பாக இருந்த தடைகளும் உடன் அகற்றப்பட்டதுடன் மீதமிருக்கும் இரண்டு தடைகளையும் ஓரிரு நாட்களுக்குள் அகற்றுவதாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

இத்தடையினால் கடந்த ஒன்றரை வருடங்கள் மக்கள் பயணம் செய்யும்போது பல்வேறு இடர்பாடுகளையும் ஊர்திகள் செல்வதில் சிரமத்தையும் எதிர்கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-3-15)

# வள்ளிபுனம் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் புனரமைப்பு

(மல்லாவி)

அயர்லாந்து நாட்டின் 30 இலட்சம் ரூபா நிதி அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவின் கீழ் உள்ள வள்ளிபுனம் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி து.வி.ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தை முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய பணிப்பாளர் அ.திலீபன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட தாய், சேய் நல வைத்திய அதிகாரி திருமதி தயாசீலன் பூங்கோதை, 622 ஆவது இராணுவ தளபதி கேணல் வெலிகல உட்பட பிரதேச பொது சுகாதார பரிசோதகர், மருத்துவத் துறை சார்ந்தவர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூன்றாவதாக இது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கைவேலி, கோம்பாவில் ஆகிய பிரதேசங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார வைத்தியப் பணிமனைகள் திறந்து வைக்கப்பட்டன. வள்ளிபுனத்தில் திறந்து வைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தின் ஒரு பகுதியில் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய அதிகாரி பணிமனை இயங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 65 | 60-100 | 70 |
| பச்சைமிளகாய் | 100-120 | 160 | 190 |
| தக்காளி | 70 | 60 | 110 |
| மரவள்ளிக் கிழங்கு | 25-30 | 30 | 30 |
| கோவா | 80 | 60 | 60 |
| கரட் | 80 | 120 | 100 |
| பூசணி | 35-50 | 40 | 60 |
| புடோல் | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 40 | 35 |
| சின்ன வெங்காயம் | 30-65 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 70 |
| பயற்றங்காய் | 150-170 | 140 | 150 |
| லீக்ஸ் | 70 | 100 | 80 |
| பீற்றூட் | -- | 120 | 100 |
| கறிமிளகாய் | -- | 160 | 250 |
| முருங்கைக்காய் | -- | 350 | -- |
| போஞ்சி | 90 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 12 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

# இராசி பலன்

*21.01.2012*

*(தை 07,சனிக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு*

*திரயோதசி பிற்பகல் 3.46 மணிவரை*

*மூலம் பிற்பகல் 4.56 மணிவரை*

*இராகுகாலம் 9.35-11.05 மணிவரை*

*சுபநேரம் 3.35-5.05 மணிவரை*

**மேடம்**



மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள்,தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்,பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்,புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**இடபம்**



பிள்ளைகள் வழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, பயணங்களில் விழிப்புணர்வு தேவை.

**மிதுனம்**



குடும்பத்தில் அந்நியோன்னியம் கூடும், இளமைக்கால நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்,கௌரவமான நாள்.

**கடகம்**



பகை விலகி பாசம் கூடும் நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், பயணத்தால் பலன் கிடைக்கும், தொழில் முன்னேற்றமுண்டு, சுவாரஸ்யமான நாள்.

**சிங்கம்**



பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பூமியால் இலாபமுண்டு,சிறப்பான நாள்.

**கன்னி**



விருந்தினர் வருகையால் மகிழ்ச்சியடைவீர்கள், தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு,புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வாகன சுகமுண்டு,சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்**



பாராட்டும் புகழும் கூடும், அரைகுறையில் இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**



பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள்,திடீர் பயணம் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம்.

**தனுசு**



சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள், தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைவர், வெளியூர் பயணமொன்று உருவாகலாம்,வாக்கு மேன்மையுண்டு

**மகரம்**



சுப விரயங்கள் ஏற்படும் நாள்,உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்**



பொருளாதார நிலை உயரும்,வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்,சமயோசிதப் புத்தியால் பலரையும் கவருவீர்கள், பயணங்களால் பலனுண்டு,தொலைபேசி மூலம் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்**



நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழில் சம்பந்தமான புதிய திட்டங்கள் உருவாகும்,வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

வளவன்

# மின்சாரம் எப்போது கிடைக்கும்? இறுப்பிட்டி மக்கள் கேள்வி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி பகுதியில் மின்கம்பங்கள் நாட்டப்பட்டு பல மாதங்கள் ஆன போதிலும் அடுத்த கட்ட பணிகள் எதுவும் மேற்கொள்ளபடவில்லை என மக்கள் கவலை தெரிவித்தனர்.

புங்குடுதீவு சில பகுதிகளுக்கு மட்டும் மின் விநியோகம் வழங்கப்படுகின்றது. இந்நிலையில் இறுப்பிட்டி வீதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவசர அவசரமாக மின் கம்பங்கள் நாட்டப்பட்டன.

இதனையடுத்து தமக்கு மின்சாரம் கிடைக்க போகின்றது என்ற நம்பிக்கையில் மக்கள் இருந்தனர்.

எனினும் மின்கம்பங்கள் நாட்டப்பட்டது மட்டுமே நடைபெற்று முடிந்துள்ளது. அதற்கு அடுத்த கட்ட பணிகள் எவையும் மேற்கொள்ளபடவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டனர். இப்பகுதி பாடசாலை உட்பட பல அரச அலுவல்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில் புங்குடுதீவு சர்வோதயத்தில் நடைபெற்ற நடமாடும் சேவையின் போது புங்குடுதீவு பிரதேசம் முழுவதற்கும் மின்சார விநியோகம் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# குளிரூட்டலும் வாயு பதனிடலும் பயிற்சி பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஓசோன் படையை பாதுகாக்கும் நோக்கில் சி.எவ்.சி./எச்.சி.எவ்.சி. வாயுக்கள் பயன்படுத்தாத குளிரூட்டலும் வாயு பதனிடலுமான பொறியியலாளர், மேற்பார்வையாளர், தொழில் நுட்பவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவினால் நேற்றும் இன்றும் நாளையும் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி பட்டறை வடக்கில் முதன்முறையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# கலாசார நிகழ்வு

மக்கள் வங்கியின் கலைவட்டம் நடத்தும் மக்கள் வங்கியின் யாழ். மற்றும் வன்னிப் பிராந்திய பணியாளர்களின் கலாசார நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ, கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான என். வசந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# வடமாகாண அபிவிருத்திக்கு மேலும் 1000 கோடி ரூபா நிதி

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அபிவிருத்திக்கு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட மேலதிகமாக ஆயிரம் கோடி ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி வரவேற்கக் கூடிய விடயமாகும். இவ்வாறான நிகழ்ச்சிகள் ஊடாக வர்த்தக நடவடிக்கைகளை முன்னேற்ற முடியும்.

இந்திய அரசாங்கம் இந்தக் கண்காட்சிக்கு பங்களிப்பு வழங்கியுள்ளது.இதுமட்டுமின்றி ஏனையபல உதவிகளையும் பங்களிப்பையும் எமது நாட்டுக்கு வழங்கி வருகின்றது.

இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தமிழ் மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கக்கூடிய வகையில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

ஆனால் அங்குள்ள சிலர் அதை தவறாக காட்ட முற்படுகின்றனர். அதனால் எந்தவிதப் பயனுமில்லை.

மேலும் இலங்கை அரசாங்கம் பல திட்டங்கள் ஊடாக மக்களின் வாழ்க்கையை முன்னேற்றம் செய்து வருகின்றது.

வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு இந்த வருடத்தில் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க ஆயிரம் கோடி ரூபாவை மேலதிகமாக வழங்கவுள்ளது.

இதன்மூலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், குடிநீர்த்தேவை, வீட்டு வசதிகள்,வீதிப்புனரமைப்பு போன்றவை மேற்கொள்ள முடியும்.

எனவே சமூகத்தின் நலனைப் பாதுகாக்க கூடிய வகையில் இந்த வர்த்தக் கண்காட்சி இடம்பெற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-6)




# நிர்வாகத் தெரிவு

(கரணவாய்)

கலைமதி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதன் புதிய நிர்வாகத்தின் தலைவராக வே.இராசலிங்கமும் செயலாளராக இ.நாகேந்திராஜாவும் பொருளாளராக த.சுமனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் போசகராக நடேசனும் பாலர் பாடசாலைத் தலைவர் துரை பிரதீபனும் விளையாட்டுக்கழக தலைவராக செ.லோகராசாவும் உப தலைவர் , உபசெயலாளர் உட்பட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என கழகம் தெரிவித்துள்ளது. (அ-106)

# கால்கோள் விழா

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற கணபதி பாலர் பாடசாலையில் இணையும் புதிய பாலர்களுக்கான கால்கோள் விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வல்வை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சோ.ஜெயதேவா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ)

# வர்த்தகர்கள் 17 பேருக்கான விசாரணைகள் 10 ஆம் திகதி

## சாவ.நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை உத்தியோகத்தர்கள் தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்களில் நடத்திய திடீர் பரிசோதனையில் அகப்பட்ட 17 வர்த்தகர்களுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளில் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இவர்களுக்கான வழக்கு எதிர்வரும் பெப்ரவரிமாதம் 10 ஆம் திகதி சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

பாவனையாளர் பாதுகாப்பு சட்டவிதிமுறைகளை மீறிய மேற்படி 17 வர்த்தகர்களையும் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுமாறு அழைப்பாணை அனுப்ப சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

மேற்குறித்த வர்த்தகர்கள் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, பொறிக்கப்பட்ட விலையை விட அதிகவிலைக்கு விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளிலேயே முற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# சித்த மருத்துவ கருத்தரங்கு

ஆகோள் ஆய்வு மையத்தால் சித்தமருத்துவர்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவக் கருத்தரங்கினை நாளை இல. 81மணியகார ஒழுங்கை, கொக்குவிலில் அமைந்துள்ள ஆகோள் ஆய்வுமைய மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.30மணி வரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கில் எதிர்கால சமுதாயத்தின் தேவைக்கேற்ப சித்த மருத்துவத்தினை பாதுகாத்தல், நவீனப்படுத்துதல், பரவலாக்கல் செய்தல் முதலான நிலைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு பல தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளது. மேலும் சித்த மருத்துவர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கவுள்ளனர். (ஏ)

# பொதுக் கூட்டம்

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி படிப்பகத்தின் 45 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு படிப்பகத் தலைவர் ச.ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.யோகராஜா, பொலிகண்டி மேற்கு கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

## வேலைக்கான கேள்வி அறிவித்தல்

*பின்வரும் வேலைக்கு இக்ராட்(ICTAD) C9/ அதற்கு மேல் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக் காட்டப்பட்ட கேள்விகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:-23.01.2012-01.02.2012 பி.ப.2 மணிவரை*

*2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:02.02.2012 நண்பகல்12 மணிவரை*

*3. கேள்வி திறக்கப்படும் திகதி:-02.02.2012 பி.ப 2 மணி*

*(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)*

*4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.*

*5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தலைவர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*

*6. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.*

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | ஏனைய வரி |
|---|---|---|---|---|
| 1 | வலி.தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் வாகன தரிப்பிடம் அமைத்தல் | 1800.00 | 1000.00 | 142.40 |
| 2 | மானிப்பாய் பட்டின உப அலுவலக பொதுச் சந்தையில் துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் அமைத்தல் | 800.00 | 1000.00 | 142.40 |
| 3 | சாந்தை மீன் சந்தை அமைத்தல் | 770.00 | 1000.00 | 142.40 |

*திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்,*
*தவிசாளர்,*
*வலி. தென்மேற்கு பிரதேசசபை,*
*மானிப்பாய்.*
*20.01.2012*

*(சி/5609)*

# இலவசக்கல்வி முறையில் இலங்கை முன்னுதாரணமாகத் திகழ்கிறது



## கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**வெளிநாடுகளிலும் பார்க்க இலவசக் கல்வியை வழங்குகின்ற நாடுகளில் இலங்கை முன்னுதாரணமாக விளங்கி வருகின்றது என்பதுடன் மாணவர்களை பாடசாலைக் கல்வியோடு இணைந்த ஆரோக்கியமான சமூகமாக வளர்த்தெடுக்க வேண்டுமென்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பாக உள்ளது என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாடசாலைப் போசாக்கு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரையான நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள தேசிய போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தை வல்வெட்டித்துறையில் ஆரம்பித்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நாட்டில் 4 மில்லியன் மாணவர்கள் பாடசாலைக்கல்வியை மேற்கொண்டு வருகின்றனர் என்பதுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதங்கள் இல்லாது அனைவருக்கும் இலவசக்கல்வி வழங்கப்பட்டு வருகிறது. இதனூடாக பாடசாலைக் கல்வியோடு இணைந்த உடல், உள ரீதியில் வளர்ச்சியடைந்த ஆரோக்கியமான சமூகமாக எமது மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டுமென்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இதனடிப்படையில் தான் நிதித்துறை , திறைசேரி, யுனிசெப் உள்ளிட்ட ஏனைய துறை சார்ந்த திணைக்களங்களின் ஊடாக 2006 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியினால் போசாக்கு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதுடன் 2012ஆம் ஆண்டில் இத்திட்டத்தினூடாக தரம் ஒன்று முதல் தரம் ஒன்பது வரை கல்வி கற்கும் 10 இலட்சம் மாணவர்கள் பயன்பெறவுள்ளனர்.

இந்நாட்டில் நிலவிய யுத்தம் முடிபுக்கு வந்துள்ள நிலையில் தற்போது இங்கு நல்லதொரு எதிர்காலம் உருவாகியுள்ளதுடன் இலவச சீருடை, இலவசக்கல்வி மற்றும் போசாக்கு தேசிய நிகழ்ச்சித்திட்டம் என்பவை குறித்து உலகின் பல நாடுகளும் ஆச்சரியம் அடைந்துள்ளன.

இதன் பிரகாரம் இலவசப் பாடப்புத்தகம், சீருடை, உணவு என்பவற்றுடன் உரிமைகளைப் பாதுகாக்கின்ற நாடாக விளங்குவதுடன் நாடளாவிய ரீதியில் 5 ஆயிரம் ஆரம்பப்பாடசாலைகளும் ஆயிரம் இடை நிலைப் பாடசாலைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கல்வியமைச்சு ஏற்கனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் நிதியை வழங்கியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் வடமாகாணத்தில் சேதமடைந்துள் நிலையில் காணப்படும் அனைத்துப் பாடசாலை மலசல கூடங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

வடபகுதி மாணவர்கள் தென்பகுதிக்கும் தென்பகுதி மாணவர்கள் வடபகுதிக்கும் சென்று வருவதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். கடந்தாண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிபுகள் தாமதமாவதைச் சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர். யாழ். மாவட்ட மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சிறப்பான தேர்ச்சி பெற்றிருக்கின்றமை பாராட்டத்தக்கது.

இந்நிகழ்வில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் பிரேமதிலக்க, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உள்ளிட்ட திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# பெற்றோல் இறக்குமதிக்காக 285,238 மில்லியன் ரூபா கடன்

## பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவிப்பு

2012 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் இறக்குமதிக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி, எக்ஸிம் பேங்க் ஒப் இந்தியா, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து 2இலட்சத்து 85 ஆயிரத்து 238 மில்லியன் ரூபாவை பெற்றோலிய வளத்துறை அமைச்சு கடனாக பெற்றிருப்பதாக அமைச்சு நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐ.தே.க எம்.பி. தயாசிறி ஜயசேகரவினால் எழுதப்பட்டிருந்த கேள்விக்கு பெற்றோலிய வளத்துறை அமைச்சு சபையில் சமர்ப்பித்திருந்த பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, எரிபொருள் இறக்குமதிக்கென பெற்றோலிய வளத்துறை அமைச்சு எந்தவாரு நிதிநிறுவனத்திடமிருந்தும் எந்தவொரு கட னையும் பெற்றுக் கொள்ளவில்லை .

எனினும் ஆசிய அபிவிருத்தி வங்கி, எக்ஸிம் பேங்க் ஒப் இந்தியா, இலங்கை வங்கி மற் றும் மக்கள் வங்கி ஆகிய நிறு வனங்களிடருந்து இவ்வருடத்திற்கான எரிபொருள் இறக்குமதி மற்றும் நடைமுறைகளுக்கென 2 இலட்சத்து 85ஆயிரத்து 238 மில்லியன் ரூபாவை கடனாக பெற்றுக் கொண்டிருக்கின்றது.

நிபந்தனைகளின் பேரில் பெற்று கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கடன் தொகையானது பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் இறக்குமதி செய்வதற்கும் அத்துடன் பெற்றோலிய பொருட்கள் களஞ்சிய குதத்தொகுதியை நிர்மாணிப்பதற்குமென இந்த கடன் தொகை பயன்படுகின்றது.

அதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு 721.6 மில்லியன் ரூபாவும் எக்லிம் பேங் ஒப் இந்தியாவுக்கு 1272 மில்லியன் ரூபாவும் இலங்கை வங்கிக்கு 25000 மில்லியன் ரூபாவும் திருப்பி செலுத்த வேண்டியுள்ளது.

அதேபோல் இலங்கை வங்கிக்கு 81 ஆயிரத்து 404 மில்லியன் ரூபாவும் மக்கள் வங்கிக்கு 37ஆயிரத்து 44 மில்லியன் ரூபாவும் திருப்பி செலுத்தவேண்டிய கடன்களாகும். (அ-2)

# அபிவிருத்தி பணிகளில் பங்கேற்பதற்காக இராணுவம் நிறுவனம் ஒன்றை உருவாக்கும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

நாட்டின் அபிவிருத்தி மற்றும் கட்டுமான பணிகளில் பங்கேற்றும் நோக்கில் இராணுவம் தனியான நிறுவனம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் விலை மனுக்கோரல் விதிமுறைகளை பின்பற்றக்கூடிய வகையில் இந்த நிறுவனம் இயங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியான ஓர் நிறுவனமொன்றை அமைத்து இந்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்திற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஓர் நிறுவனத்தை அமைப்பது குறித்து திட்டங்களை முன்வைக்கும் நோக்கில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்குள் இது ஓர் தனி அலகாக அல்லது தனி நிறுவனமாக இயங்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இராணுவத்தினர் அளித்த பங்களிப்பின் மூலம் சுமார் 300 மில்லியன் ரூபாவினை அரசாங்கத்திற்கு சேமித்து கொடுத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி அமைப்பு, கட்டிட நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறுபணிகளில் இராணுவத்தினர்பங்களிப்பு வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



வைத்திய கலாநிதி

**மரிசலீன்பிள்ளை மரியதாசன்**

(சுகாதார வைத்திய அதிகாரி-M.O.H)

(சமாதானநீதவான்)

யாழ்.மாநகர சபை

அன்பின் திருவுருவாய் அனைவருக்கும் அனைத்திலும் வழிகாட்டியாய் வாழும் தெய்வமாயிருந்த தந்தையின் பிரிவின் 31 ஆம் நாள் நினைவுத் திருப்பலி 21.01.2012 காலை 6 மணிக்கு சுண்டுக் குளி புனித யோவான் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

எமது தந்தையின் திடீர் மறைவின் போது அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய நிபுணர்கள், பேராசிரியர்கள், முன்னாள் துணைவேந்தர், முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அரசாங்க அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், மதகுருமார், கன்னியாஸ்திரிகள் , பொதுமக்கள், நண்பர்கள், முன்னாள் மேயர், முன்னாள் ஆணையாளர், மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும், இரங்கல் கூட்டத்தை சிறப்பாக ஒழுங்கு செய்த மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தி யோகத்தர்கள் , ஊழியர்கள், இரங்கல் உரையாற்றிய மேயர், ஆணையாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர்(R.D.H.S), வைத்திய அதிகாரிகள், பாடசாலைச் சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதார பொறியியல் பிரிவினர் மற்றும் குடும்பநல பணியாளர்கள், தொண்டர்கள், ஊழியர்கள் ஆகியோர் மறைவின்போது அவருக்கு செலுத்திய கௌரவத்திற்காகவும் அன்பிற்காகவும் நன்றி கூறுகின்றோம். மேலும் அவருக்கு மலர்வளையம் சாற்றியோர், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோர், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர், நாட்டின் நெடுந் தொலைவிலிருந்து வந்த நண்பர்கள், இறுதித்திருப்பலி நிறைவேற்றிய அருட்தந்தையர்கள், திருப்பலியில் பங்குபற்றி அவருக்காக பிரார்த்தித்த அனைத்து அன்புள்ளங்கள், இறுதி யாத்திரையில் பங்குபற்றிய குடும்பநல பணியாளர்கள், தொண்டர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் , உடனிருந்து உதவியோர் ஆகியோருக்கும் அவர் நோயுற்ற வேளை சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த சன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் :-மனைவி, பிள்ளைகள்.

(7329) *ஆவே மரியா*, 72, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

# கிழக்கில் உதயம் வேலைத்திட்டத்தில் அம்புலன்ஸ் வண்டிகளுக்கும் தட்டுப்பாடா?

## சஜித் எம்.பி.கேள்வி



(கொழும்பு)

கிழக்கின் உதயம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன. எனினும் கிழக்கில் இருக்கின்ற எட்டு வைத்தியசாலைகளில் உடைந்த அம்புலன்ஸ் வண்டிகளே இருக்கின்றன.

அம்புலன்ஸ் வண்டிகளை ஜேர்மனியிடம் அந்த வைத்தியசாலைகளை சேர்ந்தோர் கோரி நிற்கின்றனர். பெருந்தொகையான நிதியை ஒதுக்கிவிட்டு அம்புலன்ஸ் வண்டிகளை பிச்சை எடுக்க வேண்டுமா என ஐ.தே.க.எம்.பியான சஜித் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கேள்வி நேரத்தின் போது சஜித் எம்.பி. கிழக்கு மாகாணத்தில் காணப்படும் சுகாதார சேவைகளின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி கேள்விகளை கேட்டிருந்தார்.

கேள்விகளுக்கு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார். இதனையடுத்து எழுந்த சஜித் எம்.பி.கிழக்கின் உதயம் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எனினும் அங்குள்ள வைத்தியசாலைகளில் போதியளவான மனித மற்றும் பௌதீக வளங்கள் இல்லை. உடைந்த அம்புலன்ஸ் வண்டிகளே இருக்கின்றன. அந்த வைத்தியசாலைகள் ஜேர்மனியிடம் அம்புலன்ஸ் வண்டிகளை கோரி நிற்கின்றன. ஏன் பிச்சை எடுக்க வேண்டும் என்று வினவினார்.

இதற்கு பதிலளதித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பிச்சை எடுப்பதாக வேறு அர்த்தம் கற்பிக்க வேண்டாம். யாரும் பிச்சை எடுக்கவில்லை. நன்கொடைகள் கிடைக்கின்றன.

ஜேர்மன் செஞ்சிலுவை சங்கம் அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் தீயணைப்பு வாகனங்களை நன்கொடையாக வழங்குகின்றன. கிழக்கின் உதயம் எனும் வேலைத்திட்டத்தின் மூலம் அங்கு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

உறுப்பினர் கிழக்கிற்கு சென்றால் அபிவிருத்தி திட்டங்களை பார்க்க முடியும் என்பதுடன் சிற்சில குறைபாடுகளும் நிலவுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்வதற்காக நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (அ-2)

## ஜெகோவாவின் சாட்சிகள் மாநாடு

யெகோவா சாட்சிகளினால் நடத்தப்படும் கடவுளின் சித்தம் செய்யப்படுவதாக எனும் தலைப்பினாலான மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.40 மணிக்கு ஹொறவப்பத்தனை றோட் வவுனியா றோயல் கார்டன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து காலை 11.35 மணிக்கு முழுக்காட்டுதல் நடைபெறும். பின்னர் காவற்கோபுர சுருக்கம், ஒருவரை ஒருவர் **ஊக்கப்படுத்த வேண்டும் என்பது யெகோவாவின் சித்தமாகும்** என்ற வரவேற்பாளரின் இறுதிப் பேச்சும் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## காணாமல் போன ஜே.வி.பி. உறுப்பினர்களை கண்டுபிடிக்க முடியவில்லை; அரசு கைவிரிப்பு


(கொழும்பு)


யாழ்ப்பாணத்தில் கடந்த டிசெம்பர் 9 ஆம் திகதி முதல் காணாமல் போன ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்கள் இருவரையும் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தத் தகவலை பொலிஸ்மா அதிபர் தமக்கு அறிவித்துள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

லலித் குமார் , குகன் ஆகிய இரண்டு தமிழ் உறுப்பினர்கள் காணாமல் போனமை தொடர்பில் 10 பேரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் எனினும் முக்கிய தடயங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்கள் இருவரும் காணாமல் போனார்களா? அல்லது கடத்திச் செல்லப்பட்டார்களா? என்பது குறித்து இன்னும் உறுதியாகவில்லை என்று நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

(அ-2)





சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தின் நிறுவுனர் உதயநாளும் பரிசுத்தினமும் அண்மையில் வாழ்வகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந. இன்பராஜ் மற்றும் சிறப்பு விருந்தினர்களும் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வர்த்தகர் மு. சரவணபவனுக்கு வாழ்வக செயலாளர் ரவீகரன் நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மெழுகுவர்த்தி போராட்டம்

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பான மெழுகுவர்த்திப் போராட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்போது மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி ஊர்வலமாக ஜிந்துப்பிட்டி அன்னை வேளாங்கன்னி ஆலயம் வரை செல்லவுள்ளனர் என காணாமற் போனோரை தேடியறியும் குழு தெரிவித்துள்ளது.

எனவே, காணாமற் போனவர்களின் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் தமது உறவுகளின் விடுதலை வேண்டி புகைப் படங்களுடன் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# கருக்கலைப்பு சட்டத்தை அமுல்படுத்தக்கூடாது

## ஆயர் சம்மேளனம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கருக்கலைப்பு தொடர்பான சட்டம் அமுல்படுத்தப்படக் கூடாது என்று இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கருக்கலைப்பு சட்டத்தை சட்ட ரீதியில் அங்கீகரிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை கத்தோலிக்க ஆயர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் நோபட் அந்த்ராதி பேராயர் தெரிவித்துள்ளார்.

புனித திருவிவிலியத்திற்கு அமைவாக ஆண்டவர் மனிதனை தனக்கு நிகராக படைத்தார். ஆண்டவரே வாழ்க்கையை உருவாக்கும் படைப்பாளி. கருக்கலைப்பு கொலைக்கு நிகரானது என்ற காரணத்தினால் அதனை சட்ட ரீதியாக அமுல்படுத்த அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்த காரணத்திற்காகவும் கருக்கலைப்பை சட்டரீதியாக அமுல்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யக் கூடாது என ஆயர் தெரிவித்துள்ளார்.

இளம் வயது சிறுமிகள் பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்யப்பட்டு கருத்தரிக்கும் போது குழந்தை ஊனமுற்று பிறக்கும் என வைத்தியர்கள் ஆலோசனை வழங்கி வருகின்றனர். இந்நிலையில் கருக்கலைப்பு செய்வதற்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்திய எல்லைப் பகுதிகளை கண்காணிக்க செயற்கை கோள்

இந்திய நாட்டின் எல்லை பகுதிகளை கண்காணிக்க உதவும் ஆர்.ஐ.சேட்-1 என்ற செயற்கைக்கோள் எதிர்வரும் மார்ச் மாதம் விண்ணில் ஏவப்படவுள்ளது.

இது குறித்து இஸ்ரோ தலைவர் ராதா கிருஷ்ணன் கூறியதாவது, பூமியின் அனைத்து சீதோஷ்ண நிலைகளையும் படம் எடுக்க கூடிய ஆர்.ஐ.சேட்-1 என்ற செயற்கைக் கோள் எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதி விண்ணில் ஏவப்படவுள்ளது.

பி.எஸ்.எல்.வி.சி-19 ஏவுவாகனத்தின் மூலம் ஆயிரத்து 850 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக்கோள் கடந்த ஆண்டே விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டது.

உள்ளூர் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொலையுணர்வு செயற்கைக்கோள், விவசாயத்துக்கு ஏற்ற சீதோஷ்ண நிலைகளை படம் எடுப்பதோடு மட்டுமல்லாமல் நாட்டின் எல்லை புறங்களையும் துல்லியமாக படம் எடுக்கக்கூடியது.

இதன்மூலம் பயங்கரவாதிகள் ஊடுருவல் போன்றவற்றையும் தடுக்க முடியும். எதிர் வருகிற மே அல்லது ஜூன் மாதத்தில் ஜி.எஸ்.வி.எம்.கே.3 மூலம் நான்கு தொன் எடை கொண்ட விண் ஓடத்தை விண்ணில் செலுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ஜிசாட் 10, ஜிசாட் 7, ஜிசாட் 14 ஆகியவற்றையும் இந்தாண்டில் விண்ணில் செலுத்தவுள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

(அ-2)

## இரு நபர்கள் கைதாகினர்

போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் தரச்சான்றிதழின்றி கொண்டு செல்லப்பட்ட ஆயிரம் கிலோகிராமுக்கு மேற்பட்ட தேயிலையுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று காலை ஆறு மணியளவில் குண்டசாலை பகுதியில் வைத்துக் கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தேயிலை கழிவுத் தேயிலையா என உறுதி செய்வதற்கான பரிசோதனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர். தேயிலை சட்டவிரோதமாக கொழும்புக்குக் கொண்டு செல்லும் போதே தாம் அதனைக் கைப்பற்றியதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-2)

# சகல இனங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித்தீர்வே காலத்தின் தேவையாகும்

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு



(கொழும்பு)

சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சகல சமூகங்களின் அபிலாசைகள் பிரதிபலிக்கக்கூடிய இறுதித்தீர்வே காலத்தின் தேவையென வலியுறுத்தியுள்ள கைத்தொழில்கள் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு அமையும் போது இந்த நாட்டில் எந்த பிரச்சினையும் தோன்றாது என்றும் கூறியுள்ளார்.

கிளிநொச்சி சிவபாத கலையக அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கான கட்டடத்தை அண்மையில் திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். கிருஷ்ணா, அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

தற்போது இலங்கை புதிய அபிவிருத்திக்கான யுகத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இந்திய- இலங்கை இரு தரப்பு செயற்பாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு அனர்த்தங்களின் போது இந்தியா இலங்கைக்கு பாரிய உதவிகளை செய்துள்ளது.

வடக்கு மாகாணம் எனது பிறப்பிடமாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக கடந்த 20 வருடங்கள் எனது தாயக பூமியில் வாழ முடியாத நிலையினை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்தினர்.

இன்று வடக்கு மண்ணில் 20 ஆயிரம் குடும்பங்கள் தற்போதைய சமாதான சூழலையடுத்து மீள்குடியேறவுள்ளனர்.

அவ்வாறு மீள்குடியேறியுள்ளவர்கள் இன்னும் உரிய அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இடம்பெயர்ந்து மீள்குடியேறியுள்ள மக்களுக்கு இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் தமது உதவிகளை வழங்க வேண்டும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் வேண்டிக் கொள்கின்றேன்

இதில் எந்த சமூகமும் பிரித்துப் பார்க்கப்படவில்லை. சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரிவினைகளை களைந்து அனைவரும் சமமான பங்கினை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

ஜனாதிபதியின் தூரநோக்கு இன்று வெளிநாட்டு உறவை வலுப்படுத்தியுள்ளது. அதில் அயல் நாடான இந்தியா முன்னணியில் உள்ளது என்றார். (அ-2)

# ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை போல் உலகில் எந்தத் தலைவரும் கிடையாது

## பிரதிஅமைச்சர் காதர் புகழாரம்

இலங்கையைத் துரிதமாகக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு சகல முஸ்லிம் நாடுகளும் மென்மேலும் உதவி, ஒத்துழைப்புக்களை நல்கி அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டும் என்று சுற்றாடல் பிரதியமைச்சர் ஏ.ஆர்.எம்.ஏ.காதர் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரதியமைச்சரின் வாசஸ்தலத்தில் நடத்தப்பட்ட விசேட செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பிரதியமைச்சர் குறிப்பிடுகையில், நான் 55 வருடங்களாக நேரடி அரசியலில் இருக்கின்றேன். சேர் ஜோன் கொத்தலாவலவின் காலத்தில் அரசியலில் பிரவேசித்தவன் நான்.

நான் எதிர்க்கட்சி எம்.பி.யாக இருந்த போது எமது ஜனாதிபதி இரு தடவைகள் 25 மில்லியன் ரூபாய்படி எனக்கு நிதியொதுக்கித் தந்து மக்கள் சேவையை முன்னெடுக்க உதவினார். இதேபோல் நான் எதிர்க்கட்சி எம்.பி.யாக இருந்த சமயம் ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கைகள் எதனையும் அவர் நிராகரித்தது கிடையாது.

ஜனாதிபதி இன, மத, மொழி பேதம் பாராது மக்களுக்குச் சேவை செய்து வருகின்றார். எல்லாமக்களையும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று பார்க்கின்றார். சகல மக்களுடனும் மிகவும் அன்புடன் நெருங்கிப் பழகக் கூடியவராக அவர் இருக்கின்றார். எமது ஜனாதிபதியைப் போன்று உலகில் எந்தத் தலைவரும் கிடையாது.

இதேநேரம் எமது ஜனாதிபதி பலஸ்தீன மக்களின் நெருங்கிய நண்பன். அம்மக்களுக்காக முப்பது வருடங்களுக்கும் மேலாகக் குரல்கொடுத்து வந்திருக்கின்றார்.

சவுதிஅரேபியா, ஈரான், குவைத், கட்டார், அபுதாபி, லிபியா, எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட சகல முஸ்லிம் நாடுகளும் இலங்கைக்கு உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கிவருகின்றன.

எனவே அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் ஜனாதிபதியின் கரங்களை மென்மேலும் பலப்படுத்தவென சகல முஸ்லிம் நாடுகளும் இலங்கைக்கு உதவி, ஒத்துழைப்புக்களை நல்க முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (அ-2)

## இரத்ததானமுகாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டு கழகம் நடத்தும் வருடாந்த இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் ஒரு மணி வரை கொக்குவில் கிழக்குநாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குருதிக்கொடையாளர்கள் அனைவரும் இரத்ததான முகாமில் பங்கேற்று உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ-2)

# தெரிவுக்குழுவில் அரசியல் தீர்வு குறித்து நிபந்தனையற்ற வகையில் பேச முடியும்

## கூட்டமைப்பை அழைக்கிறார் கெஹலிய

(கொழும்பு)

அரசியல் தீர்வுக்கான நகர்வுகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் பலர் பயங்கரவாதிகளைப் போல் செயற்படுகின்றனர். கடலில் குதிக்காமல் நீச்சலிக்க முடியாது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தவே அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக் குழுவை அமைத்துள்ளது.

இத்தெரிவுக்குழுவில் அரசியல் தீர்வு குறித்து நிபந்தனைகள் அற்ற வகையில் பேச முடியும். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை பேசக்கூடாது. அல்லது அதிகாரப் பகிர்வை பேசக்கூடாது என்று தடையேதும் இல்லை.

தீர்வுக்கான அனைத்து விடயங்கள் குறித்துப் பரந்தளவில் பேசப்படல் அவசியமாகும். தெரிவுக்குழுவில் கலந்து கொண்டு பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு முன்னர் தீர்வுத் திட்டத்தை முன்வை என்பது கடலில் குதிப்பதற்கு முன்பு நீந்த முயற்சிப்பதை போன்றதாகும்.

எனவே அரசியல் தீர்வு விடயத்தில் பயங்கரவாதிகளைப் போல் செயற்பட இயலாது என்றார். (அ-2)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஏல விற்பனை

விஞ்ஞான பீடம் மற்றும் மருத்துவபீடம் ஆகியவற்றில் உள்ள பாவிக்கப்பட்ட பொருட்கள்

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாவிக்கப்பட்ட பொருட்கள் 25.01.2012 (புதன்கிழமை) அன்று பின்வரும் நேரங்களில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

விஞ்ஞானபீடம் - முற்பகல் 9.30-11.30
மருத்துவபீடம் - பிற்பகல் 01.30-03.30

1. மின்சார உபகரணங்கள் (குளிரூட்டிகள், மின்விசிறிகள், மின்னடுப்பு முதலியன)
2. கணனியும் கணனிசார் உபகரணங்களும்
3. ஆய்வுகூட உபகரணங்கள்
4. தளபாடங்கள் (மேசைகள், கதிரைகள் முதலியன)
5. அலுவலக உபகரணங்கள்

மேற்படி பொருட்களை 24.01.2012 (செவ்வாய்க்கிழமை) அன்று பின்வரும் நேரங்களில் அவ்வப்பீடங்களில் பார்வையிடலாம்.

விஞ்ஞானபீடம்-முற்பகல் 9.30-10.30
மருத்துவபீடம்-முற்பகல் 11.30-12.00

மேற்படி பொருட்கள் அவ்வவ் திணைக்கள ரீதியாகவும் பொருள் ரீதியாகவும் வகைப்படுத்தப்பட்டு மொத்தமாகவே விற்பனை செய்யப்படும். ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் பணத்தை பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி பொருட்களை 27.01.2012 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்தல் வேண்டும்.

பதிவாளர்
20.01.2012

(சி-5605)


# திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்

திராட்சை பயிர்ச்செய்கைக்கு ஊறுவிளைவிப் பனவான பீடைகளைப் பற்றி இக்கட்டுரைத் தொடர் விளக்கமளிக்கும் நிலையில் தொடர்ச்சியாக இப் பயிரில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய பீடை களையும் பற்றி இன்னும் அறிவோம் வாருங்கள்.

**திராட்சை சிறுவண்டு Scelodonta Strigicolis (சீலோடோன்ரா ஸ்ரைஜிகோலிசு)**

திராட்சைக் கொடியில் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சி பீடையாக திராட்சை சிறுவண்டை காணலாம். அளவில் சிறியதாக இருக்கும் இவ்வண்டினது பாதிப்பு திராட்சைக் கொடியையே நிலைகுலைய வைத்துவிடும்.

மெல்லிய கறுப்பு அல்லது கடும் நீல நிறத்தை யுடைய பளபளப்பான உடலைக் கொண்ட இவ் வண்டினை உன்னித்து அவதானித்தால் அதனது வன்மையான முன்சிறகில் ஆறு




கரும்புள்ளிகளை காணலாம்.

சிறிய வண்டு என குறிப்பிட்டாலும் இதனது நீளம் 4.5 மி.மீ ஆகும். தண்டிலிருந்து வெடித்து வெளி யெழும்பும் மேற்றோலின் உள்ளே 20 தொடக்கம் 40 முட்டைகளை கூட்டாக இடும்.

ஒரு பெண் வண்டு 220 தொடக்கம் 569 முட்டைகளை ஒரு வருடத்தில் இடும் வல்லமையுடைய தென்றால் பாருங்களேன்.

முட்டையிலிருந்து வெளிவரும் புழுப்பருவம் 35 நாட்கள் வரை நீடிக்கும். இப்பருவம் மரத்திலிருந்து கீழேவிழுந்து திராட்சைக்கொடியின் வேர்ப்பகுதியை நோக்கிச் சென்று வேரை சேதமாக்கத் தொடங்கிவிடும். அதிக எண்ணிக்கையுடைய இவ்வாறான புழுக்கள் கொடியின் வேர்ப்பகுதியைஅதிகமாகத் தாக்கினால் வேர்ப்பகுதி முழுவதுமான சேதத்திற்குள் உள்வாங்கப் பட்டு தாவரம் வாடி இறக்க ஆரம்பிக்கும். இந்த வாடல் அறிகுறி திராட்சை செய்கையாளர்களினால் அவதானிக் கப்பட்ட போதிலும் அதனை சரியாக இனங்காண முடியாது போவதனால் ஆரம்ப நிலையிலேயே இப்பூச்சி பீடையின் தாக்கத்தை தவிர்க்க முடியாததாகிவிடும்.

மண்ணினுள் வேர்ப்பகுதியை சேதப்படுத்தும் இவ்வண்டினது புழுப்பருவம் விருத்தி யடைந்து கூட்டுப்புழுவாக மாற 45 நாட்களெடுக்கும்.

அதாவது இந்த 45 நாட்களிலும் புழுவினால் வேர்ப்பகுதி தொடர்ந்தும் சேதப்படுத்துவதனால் சேத அளவு அதிகரித்ததாகவே இருக்கும்.

நன்றாக விருத்தியடைந்த புழு கூட்டு ப் புழுவாக உருமாற்றமடைந்து 10 நாட்க ளாக அப்படியேயிருக்கும். இதனுடன் சேர்த்து முழுமையான வாழ்க்கைக்காலம் 52 நாட்களென ஆய்ந்தறியப்பட்டுள்ளது. இங்கே இன்னொரு விடயத்தையும் அவ தானிக்கலாம். ஏதாவது குழப்பமேற்பட்டு இலையிலிருந்து கீழே விழும் வண்டு இறந்து போனது போல நடிக்கும். அவ் வாறான செய்கைகள் வண்டு எதிரி யிடமிருந்து தப்பிப்பிழைக்க செய்யும் ஒரு கைங்கரியமாகவே இதனைக் காணலாம்.

அசேதன இரசாயனமில்லையேல், புயிர்ச்செய்கையில்லை என்ற காலத்தில் நாம் வாழ்ந்தாலும் இன்னும் எமது பாரம்பரிய இனங்களையும் உள்ளூர் தொழில்நுட்பத்தையும் கட்டிக்காப்பது எமது கடமை. ஒரு வகையில் புரிந் துணர்வு நிலைக்குள் விவசாயிகள் நாம் இருப்பதுவும் ஒரு காரணமாகும்.

நிறைவுடலி வண்டுகள் சிறியவையாயினும் காரம் பெரியவை. இவ்வண்டுகள் கூட்டுப்புழுவில் இருந்து உருமாறி நிறைவுடலி வண்டாக மாறும். ஆனால் இரண்டுக்கும் உள்ள பொதுவான இயல்புகளை அவதானித்து அதிலிருந்து



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

17-IV

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

கூட்டுப்புழு மூலம் வெளிவந்த வண்டு களை வேறுபிரித்தறியவும் இயற்கை முறையாக கட்டுப்படுத்தவும் வழிகளுண்டு. இந்த வண்டுகள் திராட்சை இலைகளில் சேதத்தை ஏற்படுத்தி இலைப்பகுதியை பாதிப்படையச் செய்யாது ஆய்வு மூலம் மாற்றுக்கட்டுப்பாடு வழிகளை கண்டுபிடித்து எங்களூர் திராட்சை செய்கையாளருக்கு வழங்கப் படல் வேண்டும்.

ஆரம்பத்திலேயே சிறிய கரு வண்டுகள் தண்டி லுள்ள வெடித்தெழும்பும் மேற்றோல் பட்டையிலுள்ள முட்டைகளை இடுவதனால் சிறந்த தோல் பட்டைகளை அடிக்கடி அகற்றி விடுவது சிறந்தது. கறுப்பு பொலித் தீனை (Plastic Mulch) கொடிக்கடியில் பரவி பூச்சியின் கூட்டுப்புழுஉருவாதல், நிறைவுடலி உருவாதல் போன்ற நிகழ்வுகளில் மாற்றத்தை அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் போது இப்பூச்சிபீடையின் விருத்தியை கட்டுப்படுத்தி சேதத்தை குறைக்க முடியும்.

மேலும் இலைப்பகுதியை தட்டுவதன்மூலம் கீழே மண்ணெண்ணெய் கலந்த நீரை கொள்கலமொன் றில் வைத்து வண்டுகளை அழிக்கலாம்.

திராட்சையினை கத்தரித்து மூடிய போடோ கலவையை விசிறிவிட்டு பின்னர் அதனை கட்டுப் படுத்துவதற்காக காபரில் போன்ற ஏனைய பீடை நாசினியிலிருந்து இவ்வண்டுகளை கட்டுப்படுத் தலாம்.

மேலும் இப்பூச்சி பீடைகளை விரைந்து கட்டுப்படுத்த விவசாய பெருமக்களும் ஒற்றமையாக இருந்து முயன்றிட வேண்டும்.

ஒற்றுமையே பீடைகளை அழிப்பதற்கான பலமாகும். (தொடரும்.)

# சோமாலியாவுக்கு நன்கொடையாக 7 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் அரிசி

## கெஹலிய தெரிவிப்பு



(கொழும்பு)

உணவுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள சோமாலியாவுக்கு சுமார் 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதோடு அதற்கு அமைச்சரவை அனுமதி யும் கிடைத்துள்ளதாக அமைச் சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் காலை அரசாங்க தகவல் திணைக்களத் தில் நடைபெற்ற போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறி யதாவது,

ஏற்றுமதிக்கான அரசி பெற்றுக் கொள்வதற்காக அம்பாறை மற் றும் பொலநறுவை ஆகிய மாவட் டங்களில் இருந்து 15 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் விநியோகிக் கப்படும்.

கடந்த 2011 தொடக்கம் 2012 பெரும்போகத்தில் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் நெல்லை களஞ் சியப்படுத்த வசதிகள் இருப்பதாக நுகர்வோர் மற்றும் உள்நாட்டு வர்த் தக அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

2012 தேசத்துக்கு மகுடம் கண்காட்சி முடிவடைந்த பின்னர் அநுராதபுர மாவட்டத்துக்கு பெருந் தொகையான நெல்லை சேமித்து வைக்கக்கூடிய வசதிகள் கொண்ட களஞ்சிய வசதிகள் கிடைக்கும் என் றும் அமைச்சர் கூறினார். (அ-2)

# கருங்கற்களை கரையோரத்தில் குவிப்பதை தடுப்பதற்குத்திட்டம்

## முகாமைத்துவ திணைக்களம்

(கொழும்பு)

கரையோரப் பாதுகாப்புக்காக கருங்கற்களை கரையோரத்தில் குவிப்பதனை நிறுத்துவதற்கு கடற் கரை பாதுகாப்பு கரையோர வளங் கள் முகாமைத்துவ திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கருங்கற்களை கரையோரத் தில் குவிப்பதன் மூலம் கரையோர வலயங்களை இழக்க நேரிடுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாய கம் கலாநிதி அனில் பிரேமரத்ன தெரிவிக்கின்றார்.


இதனால் கரையோரங்களில் கருங்கற்களை குவிப்பதனை தவிர் த்து ஆழ்கடலில் இருந்து மணலை அகழ்ந்து கரையோரங்களை அலங்கரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் உள்நாட்டு சுற் றுலாத்துறை மேம்படுத்தப்படுவ துடன் மீன்பிடித்துறையையும் வளப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் நாடு பூராகவும் கடற்கரையோரத்தை அலங்கரிக்க எண்ணியுள்ளதாக கடற்கரை பாது காப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அனில் பிரேமரத்ன மேலும் கூறி னார். (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 16



ஆக்ஸ்ட் 31 ஆம் திகதி போலந்து எல்லையின் அருகேயுள்ள ஜேர்மன் நகரமாகிய கிலேவிட்ஸில் ஆத்திர மூட்டும் பாசிச சம்பவம் ஒன்று நடைபெற்றது. இச்சம்பவம் போலந்தின் மீது படையெடுப்பதற்கான சம்பவமாக பாசிஸ்டுகளால் பயன் படுத்தப்பட்டது. பின்வருமாறு இச்சம்பவம் நடந்தது. ஜேர்மனி தாக்கப்பட்டதைப் போன்றதொரு நாடகத்திற்கு ஏற்பாடுசெய்த பாசிஸ்டுகள் போலந்து இராணுவத்தின் உடையில் வேடம் போட்டு ஸ்தல வானொலிக் கட்டடத்தினுள் புகுந்து மைக்கின்முன் ஒருசில குண்டுகளைச் சுட்டுவிட்டு, போலந்து மொழியில் முன்னரே தயாரிக்கப் பட்ட வாசகத்தைப் படித்தனர்.

"ஜேர்மனிக்கு எதிராக போலந்து யுத்தத்தில் இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று இதில் கூறப்பட்டிருந்தது. நன்கு நம்பச் செய்வதற்காக பாசிஸ்டுகள் தம் மோடு டஜன் கணக்கான ஜேர்மன் குற்றவாளிகளை போலந்து இரா ணுவ ஆடையை அணிவித்து கூட்டிவந்து கிளேவிட்ஸிலேயே சுட்டுத்தள்ளினர். இதற்கு ஒரு சில நாட்களுக்கு முன், ஹிட்லர், "யுத்தத்தை மூட்டிவிடுவதற்கான பிரச்சார சாக்கை நான் தருகிறேன்; இது உண்மையானதாயிருக்குமா என்பது முக்கியமல்ல, வென்ற வனை பின்னால், அவன் கூறியது உண்மையா இல்லையா என்று

நிலையங்கள், தகவல் தொடர்பு அமைப்புக்கள், இருப்புப் பாதை மையங்கள், பொருளாதார மற்றும் நிர்வாகக் கேந்திரங்கள் மீது குண்டு மழை பொழிந்தது. இதன் விளை வாய் முதல் நாளன்றே போலந்து விமானப்படைக்கு பெருத்த சேதங் கள் ஏற்பட்டன. முக்கிய திசைகளில் போலந்து போர்முனை ஜேர்மன் டாங்கி டிவிஷன்களால் பிளவு படுத்தப்பட்டது. இந்த டிவிஷன் களுக்குப் பின்னால் மோட்டார் படைப்பிரிவுகள் வந்தன. இவற்றின் பாகங்களில் வலப்புறமும் இடப் புறமுமாக காலாற்படை வந்தது.

கிழக்குப் பிரஷ்யாவிலிருந்து முன் னேறிய 3வது பாசிச ஜேர்மனியப் படை செப்ரம்பர் 7ஆம் திகதியன்று நாரேவ் ஆற்றை அடைந்தது. சிலேசியாவிலிருந்து முன்னேறிய தெற்கு படைத் தொகுதியின் முன்ன ணிப் படைப்பிரிவுகள் செப்ரம்பர் 8 ஆம் திகதி வார்ஸாவை நெருங்கின.

போலந்து அரசாங்கம் இராணுவ உடன்படிக்கையின்படி தரைப்

காடனுக்கு வரப்பார்க்கட்டும்... காலால் அவனைப் பின்புறம் உதைத்து, மாடிப்படியில் உருட்டி விடுவேன்; இவ்வாறு நான் செய் யும் போது இதை ஏராளமான பத்திரிகையாளர்கள் இருந்து பார்க் கும்படி கவனித்துக் கொள்கிறேன்.

செப்ரம்பர் 3 ஆம் திகதிதான் பிரிட்டனும் பிரான்சும் ஜேர்மனிக்கு எதிராக முறைப்படி யுத்தத்தை அறிவித்தன. ஆனாலும் ஜேர்ம னிக்கு எதிரான தீவிர இராணுவ நடவடிக்கைகளை இவை தொடங்க வில்லை.

செப்ரம்பர் 9 ஆம் திகதி சவா ராவில் பிரெஞ்சு இராணுவம் குறு கிய நோக்கங்களோடு தாக்குதலை மேற்கொண்டாலும் செப்ரம்பர் 12 ஆம் திகதி இது நிறுத்தப்பட்டது. போலந்துக்கு உண்மையான உதவி யளித்து மேற்கேயிருந்து பாசிச ஜேர்மனியைத் தாக்கி தோற்கடிக்க பிரிட்டனிடமும் பிரான்ஸிடமும் பெரும் இராணுவச் சக்திகளிலிருந் தும் சாராம்ச ரீதியாக பிரிட்டனும்



போலந்தை ஆக்கிரமித்த 2-வது நாள் நாஜிப் படை செய்த, பலநாடுகளாலும் கண்டிக்கப்பட்ட, படுகொலை (சன்டே சம்பவம்)

டார் யூனிட்டோ கூட இல்லை"

ஜேர்மனியுடனான எல்லையில் பிரான்சுக்கோ சுமாராக 90 யூனிட் டுகள் இருந்தன. பீரங்கிகள், டாங்கிகள், விமானங்களின் எண்



1939 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் பாசிச ஜேர்மனியத்துருப்புக்கள் போலந்தின் மீது தொடுத்த தாக்குதல் சம்பவ நகர்வைக் காட்டும் வரைபடம்


ணிக்கையில் பிரெஞ்சு இராணுவம் பாசிச ஜேர்மனியப் படைகளை விஞ்சி நின்றது. ஹிட்லரின் ஜென ரல் கால்டர் தன்னுடைய யுத்த நாட்குறிப்பில் எழுதியுள்ளபடி மேற்குப் போர்முனையில் ஜேர் மனியர்களிடம் சுமார் 300 பீரங்கி களும்-டிவிஷன் பீரங்கிகளைச் சேர்க்காது- பிரான்ஸிடம் 1600 பீரங்கிகளும் இருந்தன. பிரெஞ்சு இராணுவத்திடம் சுமாராக 2000 டாங்கிகள் இருந்தன. ஜேர்மனியர் களிடம் கிட்டத்தட்ட டாங்கிகளே இருக்கவில்லை. நேசநாடுகளிடம் கிட்டத்தட்ட 3000 விமானங்கள் இருந்தன. சென்டர் படைத் தொகு தியிலோ குறைவான எண்ணிக்கை யில்தான் இவை இருந்தன.

நேச நாடுகளின் இராணுவங்கள் தாக்குதலைத் தொடுக்குமோ என்று பாசிச ஜேர்மனியின் இராணுவத் தலைவர்கள் குலை நடுங்கினார்கள் என்பதற்கு நியூரென்பர்க் விசார ணையின்போது வெளியான விவ ரங்கள் சான்று பகர்கின்றன. உதா ரணமாக பீல்ட்மார்ஷல் ஜெனரல் வெ.கைடல் பின்வருமாறு ஒப்புக் கொண்டார். பிரான்சும் பிரிட்டனும் மட்டும் தாக்குதலைத் தொடுத்திருந் தால் எங்களால் முற்றிலும் கற்பனை யான தற்காப்பைத்தான் எதிராக வைத்திருக்க முடியும். இது பற்றி ஜெனரல் யோடல் பின்வருமாறு கூறினார்:

"1939 ஆம் ஆண்டிலேயே நாங்கள் தோல்வியடையவில்லை என்றால் அதற்குக் காரணம் போலந்துடன் நாங்கள் யுத்தத்தில் இறங்கியிருந்தபோது மேற்கே 23

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்

மார்க்கோபோலோ பாலத்துச் சமர்



கேட்கப்போவதில்லை" என்று தன்ஜெனரல்களிடம் ஏராளமாகக் குறிப்பிட்டார்.

**1939 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ஆம் திகதி பாசிச ஜேர்மனியத் துருப்புகள் நயவஞ்சகமாக போலந் தின் மீது படையெடுத்தன.** அதிகா லைப் பொழுதில் 4 மணி 45 நிமி டத்திற்கு ஹிட்லரின் விமானப் படை போலந்து நாட்டில் விமான

படைகளைமுன்னுக்கு கொண்டு வந்தும் விமானப் படைத் தாக்குதல்களின் மூலமும் உட னடியாக உதவி புரியும்படி பிரான்ஸையும் பிரிட்டனையும் வற்புறுத்தி வேண்டியது. ஆனால், நேசநாடுகள் நடை முறையில் ஒன்றுமே செய் வில்லை. வெர்செய் ஒப்பந் தத்தை மறுபரிசீலனை செய் வதற்காக மகாநாடு ஒன்றைக் கூட்டுவது சம்பந்தமாக பிரான் சும் பிரிட்டனும் 1939 ஆம் ஆண்டு செப்ரம்பர்1 ஆம் திகதி ஹிட்லரின் இராஜதந்திரிக ளோடு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார்கள். ஆனால், இது வெற்றி பெறவில்லை. தனக்கு நெருங்கியவர்கள் மத்தியில் மூனிக் வாதிகளின் தலைவராகிய சேம்பர் லேனைப் பற்றி ஹிட்லர் பின்வரு மாறு அலட்சியத்தோடு குறிப்பிட் டார். "குடையேந்திய இந்த மனிதன் மட்டும் என்னிடம் பெர்ஹ்டேஸ்

பிரான்சும் தமது கூட்டாளிக்குத் துரோகமிழைத்தன.

நேச நாடுகளின் இராணுவங்களை எதிர்த்துநின்ற ஜேர்மனிய "சி" படைத் தொகுதியில் 1939 ஆம் ஆண்டு செப்ரம்பர் நடுவில் 43 காலாட்படை டிவிஷன்கள் இருந்தன. மேற்குஜேர்மனி வரலாற்றாசிரியர் என். ஃபோர்மன் எழுதியபடி இவற்றில் "11 நிரந்தர காலாற்படை டிவிஷன்களை மட்டுமே முழு மதிப்புள்ள டிவிஷன்களாகச் சொல்ல முடியும். எஞ்சியவை அனைத்தும் முற்றிலும் புது அமைப்புகளாக இருந்தன. இவை தமது பயிற்சி யிலும் இராணுவ சாதனங்களிலும் துரிதமான தந்திர யுத்தத்தை நடத்து வதற்கான கோரிக்கைகளுக்கு முற்றிலும் ஒத்திருக்கவில்லை... மேலும் இவற்றில் ஒருபகுதி படை கள் திரட்டப்பட்டிருந்த பிரதேசத் திற்குச் செல்லும் வழியில்தான் இருந்தன. படைத் தொகுதியின் வசம் ஒரு டாங்கியோ ஒரு மோட்


வி.அ.மத்சுலேன்கோ

ஜேர்மன் டிவிஷன்களுக்கு எதிராக நின்ற சுமார் 110 பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் டிவிஷன்கள் முற்றிலு மாக செயலற்று இருந்ததே.

(தொடரும்)

# தை மாத இராசி பலன்கள்

# 15.01.2012-12.02.2012




மூலம், பூராடம், உத்தராடம், 1-ம் பாதம்

### குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்!

மனசாட்சிப்படி நடந்த மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!

வாழ்க்கையில் மிக வேகமாக முன்னேற வேண்டுமென்று நினைப்பீர்கள். அவர்களைப் போல, நாமும் எப்பொழுது வரலாம் என்று ஒப்பிட்டுப் பார்க்கும் எண்ணம் உங்களுக்கு ஏற்படும். உங்களுக்கு பின்னணியாக இருப்பவர்கள் சொல்லும் யோசனைகளைக் கேட்டு, பிறகு தாங்களே ஒரு புது முடிவெடுத்துக் கொள்வது தான் உங்கள் பழக்கமாகும்.

உங்களுக்கு இந்த தை மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தன ஸ்தானத்தில் சூரியனும், இலாபஸ் தானத்தில் சனியும் இருப்பது யோகம்தான். இனி வரும் காலம் இனிய காலமாக மாற என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள். பணிபுரிபவர்கள் வி.ஆர்.எஸ் வாங்கிக்கொண்டு, பக்கபலமாக இருப்பவர்களுடன் கூட்டாக தொழில் செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள்.

5,12-க்கு அதிபதி செவ்வாய் வக்ரம் பெறும் இந்த மாதத்தில் பிள்ளைகள் உங்கள் சொற்படி கேட்காமல் சற்று விலகிச் செல்லலாம். நீங்கள் குழந்தைகளின் ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு செயல்படுவது நல்லது. சனியின் வக்ரமும் இம்மாதத்தில் நிகழவிருப்பதால், அக்காலத்தில் வாங்கல் கொடுக்கல்களில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. உங்களுக்கு வரவேண்டிய பதவிகளும், விருதுகளும் மற்றவர்களுக்கு போய்ச்சேரலாம். அலைச்சல் அதிகரிக்கும்.

இது போன்ற கிரகங்களின் வக்ர இயக்க காலத்தில் அதற்குரிய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. அப்பொழுதுதான், வாழ்க்கையும் வசப்படும். வசந்தமும் வாசலுக்கு வரும். சனிக்கிழமை தோறும் எள் கலந்த சாதத்தை காகத்திற்கு வைப்பது நல்லது. எள் தீபம் ஏற்றி, கருநிற காகம் ஏறி காசினி தன்னைக் காக்கும்" என்ற சனிபகவான் கவசம் பாடி சனியை வழிபடுவதும் நல்லது.

ஜனவரி 18ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 7,10- க்கு அதிபதியான புதன் 2-ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். தொழிலுக்கு புதிய நபர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். இதுவரை மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்துவீர்கள்.

பெப்ரவரி 4-ம் திகதி கும்ப இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பூமி வாங்குவதில் இருந்த பிரச்சனைகள் அகலும். வழக்குகளில் வெற்றி கிட்டும். எதிரிகள் இல்லம் தேடி வந்து சரணடைவர். பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் பெருகும். தீர்த்த யாத்திரைகளை மேற்கொள்வீர்கள். வள்ளல்களின் ஒத்துழைப்போடு வாகன மாற்றம் செய்ய நினைக்கும் எண்ணமும் நிறைவேறும்.

பெப்ரவரி 4-ம் திகதி மீன இராசியில் சுக்கிரன் உச்சம் பெறப் போகிறார். 6-க்கு அதிபதி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பழைய கடன் சுமை குறைந்தாலும் புதிய கடன்சுமை ஒரு சிலருக்கு உருவாகலாம். உத்தியோக மாற்றம் திடீரென வந்து சேரும். அந்நிய தேச வாய்புகள் கைநழுவிப் போகலாம். சுக்கிர வழிபாடு சுகத்தைக் கூட்டும். அதே நேரத்தில் சனியும் வக்ரம் பெறுவதால் குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் சென்றால், மன அமைதி காணலாம்.

இம்மாதம் ஆதியந்தப் பிரபு வழிபாடும், குரு தட்சணாமூர்த்தி வழிபாடும் குழப்பங்களிலிருந்து உங்களை விடுவிக்கும்.

இம்மாதம் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும் என்றாலும், ஒருதொகை செலவழித்த பிறகே அடுத்த தொகை உங்களுக்கு வந்து சேரும். சனியின் வக்ர இயக்க காலத்தில் கணவரிடம் மட்டுமல்லாமல், குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் அனுசரித்து செல்வது நல்லது. உடல் நிலையிலும் நோய் தோன்றுவதற்கான அறிகுறி தெரியும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளை மேற்கொள்ளுங்கள். பக்கத்து வீட்டாரின் பிரச்சனைகளில் தலையிடாதிருப்பது நல்லது. குழந்தைகளை கண்காணிப்பதன் மூலம் நிம்மதி கூடலாம். குரு வழிபாடு நன்மை தரும்.

## சிவல்புரி சிங்காரம்

உத்தராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதங்கள்

### அங்காரக வழிபாடு ஆனந்தம் வழங்கும்!

முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தை எந்நாளும் வளர்த்துக் கொண்டிருக்கும் மகர இராசி நேயர்களே!

நல்லது எது? கெட்டது எது என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. நீங்கள் பேசும் வெளிப்படையான பேச்சுகளே உங்களுக்கு எதிர்ப்புகளை உருவாக்கும். உங்கள் மனதில் எது சரியென்று படுகிறதோ, அதைத்தான் செய்வீர்கள்.

மற்றவர்களிடம் ஆலோசனை கேட்டாலும், கடைசி முடிவாக உங்கள் முடிவையே நீங்கள் வைத்துக்கொள்வீர்கள். பின் விளைவைப் பார்த்தபிறகு மீண்டும் ஆலோசனை கேட்கும் வழக்கம் உங்களுக்கு உண்டு.

உங்களுக்கு இந்த தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமாதிபதி சூரியன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். ஒருவர் ஜாதகத்தில் 6,8,12 ஆகிய இடங்களில் வலிமை வாய்ந்த கிரகங்கள் இருந்தாலும், அவை பலம் பெற்றிருந்தாலும் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே, இது போன்ற காலங்களில் நீங்கள் வழிபாட்டின் மூலம் வளர்ச்சிளைக் கூட்டிக் கொள்ளலாம்.

அது மட்டுமல்லாமல், செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால், ஆரோக்கியத்தைக் கொஞ்சம் பேணிப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. இருப்பினும் குருவின் பார்வை செவ்வாய் மீது பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் நீங்கும். பத்தில் சனி பலம் பெறுவதால் தொழில் சீராக நடைபெறும். தொகை வரவும் திருப்தி தரும். குரு பெயர்ச்சிவரை சற்றுப் பொறுமையாக செயற்படுவது நல்லது. அதன் பிறகு உங்கள் இராசியிலேயே குருவின் பார்வை பதியப்போகிறது. எனவே குரு வழிபாடும், அங்காரக வழிபாடும், சனி வழிபாடும் வாரத்தின் மூன்று நாட்கள் நீங்கள் மேற்கொண்டால், யாராலும் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது.

புதன், உங்கள் இராசியைப் பொறுத்தவரை 6,9-க்கு அதிபதியாகிறார். ஜனவரி 18ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். எனவே, பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவுக்கு வரும். பரம்பரை சொத்துக்களால் வந்த பிரச்சனை அகலும். பழைய சொத்துக்களைக் கொடுத்துவிட்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மாமன், மைத்துனர் வழியில் அனுசரித்துச் செல்வது நல்லது.

பெப்ரவரி 4-ம் திகதி கும்ப இராசியில் சஞ்சரிக்கும் புதனின் பலத்தால் நீண்ட நாட்களாக நடைபெறாத காரியமொன்று நடைபெறும். பங்காளிப்பகை மாறும். உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். உடல் ஆரோக்கியத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு பாதிப்பு ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். செவ்வாயின் வக்ர இயக்கமும், புதனின் கும்பராசி சஞ்சாரமும் நற்பலன்களை வழங்க, இக்காலத்தில் அனுமன் மற்றும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.




பெப்ரவரி 4-ம் திகதி சுக்கிரன் உச்சம் பெறுகிறார். 5,10-க்கு அதிபதி உச்சம் பெறும் இந்த நேரம் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். சுப காரியப் பேச்சுக்கள் வந்து சேரும். துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டு செயற்படுவீர்கள். பிள்ளைகள் வழியில் கல்விநலன் கருதியும், கடல் தாண்டி செல்லும் முயற்சி கருதியும் நீங்கள் நினைத்த எண்ணங்கள் நிறைவேறும். பணவரவும் திருப்பதி தரும்.

இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் முருகன் வழிபாட்டை மேற்கொள்வதோடு, சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். அந்த இரண்டு கிரகங்களின் வக்ர காலங்களிலும் வழிபட்டால் இனிய பலன்கள் வந்து சேரும்.

இம் மாதம் உஷ்ணாதிக்க நோய்கள் உருவாகலாம். அது மட்டுமல்லாமல், அஷ்டமத்தில் செவ்வாய் வக்ரமாவதால், ஆரோக்கியத்தில் கூடுதலாகவே அக்கறை காட்டுவது நல்லது. குடும்ப உறுப்பினர்களிடம் பாசம் காட்டுங்கள். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. கணவன் மனவிக்குள் ஒற்றுமை மேலோங்கும். இருப்பினும், வீட்டுத் த்கவல்களை மூன்றாம் நபரிடம் சொல்லாமல் இருப்பது நல்லது. மாதக் கடைசியில் காரிய வெற்றி ஏற்படும்.

(தொடரும்)

# சம்பூரில் அனல்மின் நிலையம் அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள அனல்மின் நிலையத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை ஊடக பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பூர் அனல்மின் நிலைய அமைப்பு பணிகளுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்தியா நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (2)

# பதவியுயர்வு வழங்க நீதிமன்றம் உத்தரவு

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 39 பேர் உட்பட 664 பொலிஸ் சார்ஜண்ட்களுக்கு நிரந்தர உப பொலிஸ் பரிசோதகர்களாக பதவியுயர்வு வழங்கும் படி பொலிஸ்மா அதிபருக்கும் பொது சேவை ஆணைக்குழுவுக்கும் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் பணித்துள்ளது.

இந்த பதவியுயர்வுகள் ஜூலை 11 2007 இற்கு பின் திகதியிடப்பட வேண்டுமெனவும் சம்பள நிலுவைகள் ஏதும் வழங்கப்படாது எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தம்மை விட தகுதி குறைந்த 71 பேருக்கு பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டதை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்த வழக்கிலே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# செனட்சபை அமைப்பதன் மூலம் அரசியல் தீர்வு காணமுடியாது

## சட்டத்தரணி தயாசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

செனட் சபை ஒன்றை அமைப்பதன் மூலம் நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என இலங்கையின் சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

தற்காலிக அடிப்படையில் செனட் சபையை அமைக்க முடியுமே தவிர நிரந்தரமான தீர்வுத் திட்டமாக செனட் சபை அமையாது என கொமின் தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு க்ாண வேண்டுமாயின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்றும் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் எனவும் அரசாங்கம் முன்னுக்கு பின் முரணான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றது.

செனட் சபை அமைப்பதன் மூலம் மற்றுமொரு குழு அரசியல்வாதிகளின் அதிகாரம் வலுப்பெறுமே தவிர ஆக்கபூர்வமான தீர்வாக அமையாது என சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளமையால் அரசாங்கம் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்து செய்ய எவரையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# அமைச்சர்களின் சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை

## கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

கபினட் அமைச்சர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அமைச்சர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் அரசியலமைப்புக்கு அமைய அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளமும் ஒரே மட்டத்திலேயே காணப்படுகிறது. நீதிபதிகளுக்கு மாத்திரமே சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் அமைச்சரவை அமைச்சர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கவில்லை என அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

# இந்தியா 800 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி!

## எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்த்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்:எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

கரையோர அதிவேக புகையிரத மார்க்கத்தின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட காலி-ஹிக்கடுவ புகையிரத மார்க்கத்தின் ஒரு பகுதியை புகையிரத திணைக்களத்திடம் கையளிப்பதற்காக நடைபெற்ற நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

வடமாகாணத்தின் புகையிரத மார்க்கம் தொடர்பிலான அனைத்து வேலைத் திட்டங்களையும் அடுத்த ஆண்டிற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக எஸ்.எம்.கிருஷ்ணா குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக இந்தியாவின் கடனுதவியின் கீழ் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொடுக்கவுள்ளதாகவும் இலங்கையில் சமாதானம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேலும் விஸ்தரிக்க விரும்புவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறினார். (அ-2)

# 2012.01 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1643-ஏபல் டாஸ்மான் தொங்காவில் இறங்கிய முதல் ஐரோப்பியர் ஆவார்.

★ 1793-பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் அரசத்துரோகக் குற்றச்சாட்டுகளுக்காக மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டான்.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவிஸ் ஐக்கிய அமெரிக்காவின் செனட்டில் இருந்து விலகினார்.

★ 1925-அல்பேனியா குடியரசு அறிவிக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: அவுஸ்திரேலியா மற்றும் பிரித்தானியப் படைகள் லிபியாவின் டோபுருக் நகரைத் தாக்கின.

★ 1947-முதலாவது சிங்களத் திரைப்படம் (கடவுனு பொரன்டுவ) திரையிடப்பட்டது.

★ 1954-உலகின் முதலாவது அணுசக்தியாலான நீர் மூழ்கிக் கப்பல் (USS) யு.எஸ்.எஸ்.நோட்டிலஸ், ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

★ 1960-மேர்க்குரி விண்கலத்தில் சாம் என்ற பெண் குரங்கு விண்வெளிக்குப் பயணமானது.

★ 1972-திரிபுரா, மேகாலயா மற்றும் மணிப்பூர் ஆகியன இந்தியாவின் தனி மாநிலங்களாக்கப்பட்டன.

★ 2004- நாசாவினால் செவ்வாய்க் கோளுக்கு அனுப்பப்பட்ட ஸ்பிரிட் தளவுளவியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. எனினும் இது பூமியில் தன்னியக்க முறையில் திருத்தப்பட்டு பெப்ரவரி 6 இல் தொடர்புகள் மீண்டும் பெறப்பட்டன.

★ 2008-அலாஸ்காவின் இயாக் மொழி பேசும் கடைசி பழங்குடி இறந்தார்.

**பிறப்புகள்**

★ 1912- கொன்ராட் எமில் புளொக், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர். (இ.2000)


★ 1953-பால் ஆலன், மைக்ரோசாப்ட் நிறுவுனர்களில் ஒருவர்.

★ 1963- அகீம் ஒலாஜுவான், நைஜீரியக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

**இறப்புகள்**

★ 1989-சு.வித்தியானந்தன், ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர்.

★ 2002- சொக்கலிங்க பாகவதர், தமிழ் திரைப்பட நடிகர்.



★ மார்க்சியப் புரட்சியாளர் விளாடிமிர் லெனின் நினைவு தினம்.(பி.1870)

# இலங்கையில் மாற்றம்... புலம்பெயர்ந்தவர்களால் நடக்கும்!


சேரன்

ஒருவருக்கு இரண்டு தாய். இருப்பதற்கான சாத்தியங்களை போன்றது தான் இரண்டு தேசங்கள் இருப்பதும். தொடர்ச்சியான இலங்கை இனப்படுகொலைகள் இரண்டு தேச சாத்தியம் பெற்ற இலட்சோப இலட்சம் புலம்பெயர்ந்தோரை உருவாக்கியது. வேரை விட்டு வெகுதூரம் விலகி விழுந்த விதைகளில் ஒருவராக, இன்று கவிதை விருட்சமாக இருப்பவர் கவிஞர் சேரன். தன் காடாற்று மற்றும் எ செகண்ட் சன் ரைஸ் நூல்கள் வெளியீட்டு விழாவுக்காக கடந்த வாரம் சென்னை வந்திருந்தார். கனடாவில் விண்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் -மானுடவியல் துறை பேராசியராக இருப்பவரிடம் இன்றைய புலம்பெயர்ந்தோர் நிலை குறித்துப் பேசியபொழுது அவர் தெரிவித்ததாவது:

"என் காடாற்று தொகுதியில் இருக்கும் பெரும்பாலான கவிதைகள் இலங்கையில் நடந்த இனப்படுகொலைகளின் தாக்கத்தின் விளைவாக எழுதப்பட்டவை. அதனால்த்தான் காடாற்று என்று பெயரிட்டேன். காடாற்று என்றால்... இறந்து போனவருக்குச் செய்யும் சடங்கு. இறந்து போனவர்கள் பற்றிய சோகத்துக்கும் இழப்புக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, ஆகவேண்டிய அடுத்த வேலைகளைப்பார்க்க வேண்டும் என்பதற்கான சடங்கு அது. ஆனால், இலங்கையில் நடந்த படுகொலைக்கு அப்படி காடாற்று செய்ய முடியாது. 'போர் முடிந்துவிட்டது. எல்லாவற்றையும் மறந்துவிட்டு, இனி அடுத்து ஆகவேண்டிய அபிவிருத்தி வேலைகளில் நீங்கள் உங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்' என்று அரசு விரும்புகிறது. ஆனால், அது அப்படி இல்லை என்பதுதான் என் கவிதைகளின் மையம்!"

**"புகலிடச் சூழல் அனுபவங்கள் படைப்பின் செயற்பாடுகளை எப்படி பாதிக்கிறது?"**

"தமிழகத்தில் பிறந்து வளர்ந்து, வாழ்ந்து படைக்கிற இலக்கியம் வேறு... 20 வயது வரை ஒரு தேசம், பிறகு இன்னொரு தேசம், இன்னொரு சூழல், இன்னொரு தேசகீதம் இன்னொரு நாட்டுடன் விசுவாசம் என்று வாழும் புகலிடத் தமிழர்களின் இலக்கியப் பங்களிப்புகள் வேறு. அந்த விதத்தில் இது புதிய படைப்பு அனுபவத்தை முன்வைக்கிறது!"

**"இலங்கைப்பிரச்சினையில் இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகளை நீங்கள் எப்படிப்பார்க்கிறீர்கள்?"**

"போர் ஆரம்பமான நாள் முதல் அது முடிவுக்கு வரும்வரை இந்திய அரசின் நேரடியான, மறைமுகமான உதவி இலங்கை அரசாங்கத்துக்கு இருந்தது.

இந்திய உதவி இல்லாமல் அந்தப்போரில் அவர்கள் வெற்றி அடைந்ததற்கான சாத்தியங்கள் இல்லை. இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் கூற்றுக்களும் இதை உறுதிப்படுத்தின ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையும் அதைத் தெளிவுபடுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் கோர்டன் வைஸ், 'கேஜ்' என்ற தன் நூலில் அதை நேர்மையுடன் பதிவு செய்ததை, இந்தியச் சஞ்சிகை ஒன்று கூண்டு என்ற தலைப்பில் தமிழில் வெளியிட்டு இருக்கிறது. இதை எல்லாம் வைத்துப்பார்க்கும் போது விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதில் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் செயற்பட்டு இருப்பது விளங்கும். எத்தனை அப்பாவி மனிதர்களை அழித்தேனும் விடுதலைப்புலிகளை ஒழித்துவிட வேண்டும் என்ற அவர்கள் நோக்கம் நிறைவேறி விட்டது. இந்த உடன்படிக்கையால் தான் உலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் அமைப்பும் அதைக் கண்டுகொள்ளாமல் இருந்தன.

'இவ்வளவு உயிர் இழப்பு ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை' என்று இந்தியாவும் சர்வதேச அமைப்புக்களும் யோசிக்கக்கூடும். ஆயினும் போரின் விளைவுகளையும் வழிமுறைகளையும் நியாயப்படுத்துவதற்கான காரணங்களைத் தேடுவதுதான் இந்தியாவின் இப்போதைய நோக்கமாக இருக்கிறது.

அதேபோல வடகிழக்கு மாகாண மக்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதை இவர்களாகவே முடிவுசெய்து நடவடிக்கைகள் எடுத்து வருவது தமிழர்களுக்குப் பெரும்பாலும் பயன் அளிப்பதாக இல்லை. இப்போது இந்திய அரசு 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தருவதாக அறிவித்துள்ளது. அதிலும் கூட பன்னாட்டு நிறுவனங்களுக்கு கிடைக்கும் ஆதாயத்தைவிட இலங்கைத் தமிழர்களுக்கு கிடைக்கும் பலன்கள் மிகக் குறைவுதான்!"

**"வீடுகட்டித் தருவதை ஏதோ ஒரு கட்டடநிறுவனம் செய்துதானே ஆகவேண்டும்? அது பன்னாட்டு நிறுவனமாக இருப்பதில் என்ன தவறு?"**

அபிவிருத்தித் திட்டங்கள் அந்தப் பிராந்திய மக்களின் நலன்களுக்கு பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும் என்பார் அமர்தியா சென். மலைகளைக் குடைந்து கனிமங்களை வெட்டி எடுப்பது நல்லது என்பது பொதுவாக சரியான கருத்து தான். அது அங்கு வாழும் பழங் குடிகளை அப்புறப்படுத்துவதாக இருந்து விடக்கூடாது அல்லவா? சத்தீஸ்கரில் அதுதானே நடக்கிறது? கோர்ப்பரேட் நிறுவனங்களிடம் பொதுமக்களின் நலனை எதிர்பார்க்கவே முடியாது.

இலங்கை வடகிழக்குப் பகுதியில் நடைபெறும் பல அபிவிருத்தித் திட்டங்களில் அமெரிக்க சீன கோர்ப்பரேட் நிறுவனங்கள் அடையும் பொருளாதாரப் பயன்கள்தான் அதிகம். அங்கு அமைக்கப்படும் காற்றாலைகள் மலேசியாவில் இருக்கும் சீனர்களின் நிறுவனம். இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவும் அங்கு நடப்பதாகச் சொல்லும் பல நலத்திட்டங்களை போருக்குப்பிறகு பங்கு போட்டுக் கொண்டு இருக்கின்றன. இவை எல்லாமே அந்த நிறுவனங்களின் நலன்களுக்காகத்தான். மக்கள் நலம் அதில் குறைவாகவே இருக்கும்!"

**"இலட்சக்கணக்கில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டு மீதம் இருப்போர் முள்வேலி சிறையில் அடைபட்டு இருக்கும் இந்தச் சூழலில் தமிழர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?"**

"ஐந்து முக்கிய அம்சங்களைச் சொல்ல வேண்டும்.

1.கடந்த முப்பது ஆண்டுகளில் நிகழ்ந்த போராட்ட வழிமுறைகள், வெற்றிகள், தோல்விகள் குறித்து, காய்தல், உவத்தல் இல்லாத சுய விமர்சனம் முன்வைக்கப்பட வேண்டும்.

2.இனி வரும் போராட்டம் பன்முகப்பட்ட, பரந்துபட்ட ஜனநாயகத்தை உள்ளடக்கிய அனைத்துத் தரப்பு இலங்கைத் தமிழரையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் அமைப்பாக இருக்கவேண்டும்.

3.இந்தப் போராட்டத்தினால் புலம் பெயர்ந்து இருக்கும் தமிழர்கள், பல்வேறு நாடுகளில் வசித்து வரும் தமிழர்கள், தமிழகத் தமிழர்கள் அனைவரும் உணர்வுத் தோழமை என்ற அடிப்படையில் ஜனநாயக ரீதியில் தோள் கொடுக்க வேண்டும். அது, குறுகிய கட்சி நோக்கில் இல்லாமல், பொதுமக்கள் தளத்தில் அமைய வேண்டும்.

4.சர்வதேச அமைப்புகளான ஐ.நா.போன்றவை மீது நம்பிக்கை நீர்த்துப் போனதால், அந்த அமைப்புகளுக்கு அப்பாற்பட்ட தீர்வுகள் தேவை.

5. இன்றைய புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு ஒரு தேசம், ஒரு நாடு, ஒரு பாஸ்போர்ட், ஒரு தேசிய கீதம் என்பது மறைந்து விட்டது. நாடுகடந்த தேசிய அடையாளம் தேவையாக இருக்கிறது. அதை நோக்கி பயணிக்க வேண்டி இருக்கிறது.

**"நாடு கடந்த தேசிய அடையாளத்தை நோக்கிப் பயணிப்பது என்றால்....?"**

"கடந்த வாரத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஜெய்ப்பூரில் 'நடந்த நாடு கடந்து வாழும் இந்தியர்களுக்கான வாக்குரிமை' பற்றி பேசியிருக்கிறார். அது போன்ற வாக்குரிமை புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கும் வாய்க்கும் பட்சத்தில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். பொதுவாக இரண்டு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது. பத்து இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இருக்கும் சூழலில் அவர்களுக்கும் வாக்குரிமை கிடைக்கும் எனில் மாற்றங்கள் ஏற்படும் என்று நம்புகிறோம்!"

**"எலெக்ட்ரானிக் வாக்குரிமை சாத்தியமாக எத்தனை காலம் ஆகும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?"**

"செல்போன், இணையத்தளம் மூலம் வாக்கு அளிக்கும் வசதிகள் இந்தியாவிலேயே ஓர் இடத்தில் பரீட்சார்த்தமாக செய்து பார்த்தாக அறிகிறேன். குறைந்தது ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்குள் இது பரவலாக சாத்தியமாகலாம். வரிசையில் நின்று வாக்கு அளிப்பதில் மக்களுக்கு இருக்கும் மனச்சோர்வு, அக்கறையின்மை போன்றவை இந்த எலெக்ட்ரானிக் வாக்குரிமையைத் துரிதப்படுத்தும். அதனால், வேகமாக இந்த மாற்றம் நிகழ்ந்துவிடும். இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் ஏற்கனவே இந்த வாக்கு அளிக்கும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டது. நாங்கள் கற்பனை செய்து வைத்து இருந்த 'நாடு கடந்த தேசியம்', சாத்தியமாவதற்க்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம்!"

தமிழ்மகன்

# ம.உ பேரவை கூட்டத்தொடரிலிருந்த தப்பிக்க கதைவிடுகிறார் ஜனாதிபதி

## 13 + பல்லவியில் எப்பயனும் இல்லை என்கிறார் கிரியெல்ல



ஜெனீவா மாநாட்டின் போது இந்தியாவின் ஆதரவை திரட்டிக் கொள்ளும் நோக்கிலேயே அரசு 13 ஆவது அரசமைப்புக்கு அப்பால் சென்று தேசிய இனப்பிரச்சினை தீர்வை காண்பதற்கு தயார் என மீண்டும் அந்நாட்டிடம் உறுதிமொழிகளை அள்ளி வீசியுள்ளது என்று பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஒருபோதும் இந்த உறுதிமொழியை நிறைவேற்றாது என்றும் ஆணித்தரமாக இடித்துரைத்துள்ளது.

இதற்கு முன்னரும் அவ்வாறான உறுதிமொழிகளை பலமுறை அள்ளி எறிந்துள்ளார் ஜனாபதிபதி. நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களின் போதெல்லாம் இந்தப் 13 பிளஸ் என்ற பல்லவி பாடப்பட்டுள்ளது.

ஆனால் இதனால் கண்டபயன் எதுவுமில்லை என்பதுடன் இனி காணப்போகும் பயனுமில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துமாறு அதற்கு அழுத்தம் கொடுக்காமல் இந்தியா அமைதியாக இருப்பது புரியாத புதிராகவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உறுதிமொழி தொடர்பாக கருத்து வெளியிடும் போதே லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு ;

தற்போதைய அரசு அதிகார பரவலாக்கத்திற்கு ஒருபோதும் இணங்காது அவ்வாறு இணங்கும் பட்சத்தில் அவர்களின் கூட்டமைப்பு சிதறிவிடும். இந்தப் பயமும் அரசை வாட்டி வதைக்கின்றது.

எதிர்வரும் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின்போது இந்தியாவின் ஆதரவை திரட்டி கொள்வதற்காகவே அரசு இந்த தந்திரரோபாயத்தை கையாண்டுள்ளது.

ஜெனீவா மாநாட்டின்போது தமிழர்களுக்கு நாங்கள் இவ்வாறானதொரு தீர்வை வழங்கவுள்ளோம் எனக் கூறி தப்பித்து கொள்வதற்கு அரசு கையாளும் உபாயம் இது. இதன் போது இந்தியாவும் இலங்கையும் போலி உறுதிமொழிகளை நம்பி அவற்றிற்கு பக்கபலமாக இருக்கும் என்றார் அவர். (அ-2)

# பொலிஸார் தாக்குதல் குறித்து 12 மனுக்கள் விசாரணைக்கு

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக நிலையத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கையில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் காயமடைந்ததாகக்கூறப்படும் 12 பேர் தாக்கல் செய்திருந்த 12 அடிப்படை மனித உரிமை மனுக்கள் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மேமாதம் 30ஆம் திகதி கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் ஊழியர்கள் ஆரம்பித்திருந்த எதிர்ப்பு நடவடிக்கையின்போது இந்த மோதல் ஏற்பட்டிருந்தது.

இந்த மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் மார்ச்மாதம் 5ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (அ-2)

# சரத் சுதந்திர தினத்தன்று விடுதலை செய்யப்படுவார்?

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சுதந்திர தினத்தன்று நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எனவே குறித்த காலம் வரையில் எந்தவொரு போராட்டத்தையும் நடத்தக்கூடாது என சரத் பொன்சேகா ஆதரவாளர்களிடம் டிரான் அலஸ் கோரியுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் பல அமைப்புக்கள் பாரியளவில் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டிருந்தன.

எனினும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி வரையில் எந்தவொரு போராட்டத்தையும் நடத்தாது அமைதியை பேணுமாறு அலஸ் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரியுள்ளார்.

சுதந்திர தினத்தன்று சரத் பொன்சேகா நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படாவிட்டால் மறுதினமே பாரியளவில் போராட்டங்களை நடத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உலக பொருளாதார மந்தநிலையானது இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும்

## உலக வங்கி எச்சரிக்கை

மேற்கத்தேய நாடுகளின் நிதி நெருக்கடி ஏற்படுத்தியுள்ள பொருளாதார மந்த நிலையானது இலங்கையில் பொருளாதாரத்தில் இறங்கு நிலையை ஏற்படுத்துமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் 2011 இல் 8.3 வீதமாக இருந்து 2012 இல் 8.0 வீதத்தை அடையும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

இந்நிலையில் உலக வங்கியின் இவ்வாண்டுக்குரிய உலக பொருளாதார வாய்ப்புக்கள் குறித்தான அறிக்கை வெளிவந்துள்ளது.

இதில் தென்னாசிய பிராந்தியத்தின் பொருளாதார வாய்ப்புக்கள் குறித்தான மதிப்பீட்டில் மேற்கத்தேய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் இலக்கை அடைய வாய்ப்புகளை வழங்காதென தெரிவித்துள்ளது.

யூரோ நாணய வலயத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி, தென்னாசியாவுக்கான பொருளாதார மூலதன பரிமாற்றத்தில் பலவீன நிலையை தோற்றுவிக்கும் எனவும் உலக வங்கி எச்சரித்துள்ளது.

இலங்கை, மாலைதீவு, வங்கதேசம் ஆகிய நாடுகள் ஐரோப்பிய வலய நாடுகளுடன் கொண்டிருக்கின்ற நெருக்கமான வர்த்தக பரிமாற்றத்தில் சரிவு நிலை ஏற்படும் எனவும் உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையில் இலங்கையும் மாலைத்தீவும் கடினமான நிலையை எட்ட வேண்டும் என தெரிவித்துள்ள உலக வங்கி எண்ணெய் இறக்குமதி சார்ந்த நாடுகளில் ஏற்படும் அழுத்தம் எண்ணெய்விலை அதிகரிப்பை இலங்கையில் ஏற்படுத்தும் என எச்சரித்துள்ளது. (அ-2)



சுமார் ஆயிரத்து 600 மில்லியன் ரூபா செலவில் நாரஹேன்பிட்டியவில் நிர்மாணிக்கப்பட்டவுள்ள இலங்கை மின்சார சபை தலைமை காரியாலயத்திற்கான அடிக்கல்லினை மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நாட்டி வைப்பதை படத்தில் காணலாம்.

# உயர்தர பரீட்சை முடிபுகள் குறித்து 200 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

உயர்தர பரீட்சை பெறுபேறு ஒழுங்கீனம் தொடர்பாக 200 முறைப்பாடுகள் வரை கிடைக்க பெற்றுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளினால் தொடர்ந்தும் முறைப்பாடுகள் முன்வைக்கப்படுவதாக ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெட்டுப் புள்ளி உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளே அதிகளவில் கிடைக்க பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத தவிர பெறுபேறுகள் அடங்கிய தகவல்கள் உரிய வகையில் வெளியிடப்படவில்லை எனவும் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறு கிடைக்ககாததனால் மாணவர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தரம் ஒன்றுக்கு தனது பிள்ளையை பாடசாலையில் சேர்க்க மறுத்ததனால் பாடசாலை அதிபருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் முறைப்பாடு தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இலங்கை மனித உரிமை ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தோர் குறித்து விசாரணை

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி காணி அபகரிப்பு, கப்பம் பெறல் உள்ளிட்ட பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் குறித்து விசாரணை நடத்தும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில் எந்தவொரு சந்தேக நபருக்கும் தப்பிச் செல்வதற்கு இடமளிக்க கூடாது என பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்கக்கோன் உத்தரவிட்டுள்ளார்.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# செங்கோலில் சத்தியப்பிரமாணம் செய்தாலும் நாட்டில் அநியாயமே நடக்கின்றது

## காணாமல் போனோர் குறித்து சிறிதரன் எம்.பி.



(கொழும்பு)

திரும்பிப் பார்க்கும் இடமெல்லாம் இரா ணுவ முகங்களும் முகாம்களும் இருந்தாலும் யாழ். மண்ணில் காணாமல் போன இருவரையும் தேடிப்பிடிக்க முடியாதுள்ளது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் எம்.பி. யான சிறிதரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஆட்சிக்காக செங்கோலில் சத்தியப்பிரமாணம் செய்தாலும் நாட்டில் அநியாயமே நடக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழில் இராணுவ நிர்வாகமே நடைபெறுகின்றது. அங்கு 70 வீதமான படையினர் நிலை கொண்டிருக்கின்றார்கள். எனினும் இவ்விருவரையும் ஆயுதம் தரித்த குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

திரும்பும் திசையெல்லாம் இராணுவ முகங்கள், முகாம்கள் தெரிந்தாலும் காணாமல் போனோரை தேடிப்பிடிக்க முடியாதுள்ளது.

சேந்தாங்குளத்தில் நுளம்புகளை விரட்டுவதற்கு புகை போட்டமைக்காக கடற்படையினர் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தினர்.

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

யாழ். மண் இரத்தம் தோய்ந்த மண், குருதிகளால் நனைந்த மண், ஆயிரம் ஆயிரம் பேர் காணாமல் போன, பலியான மண், பலி கொடுக்கப்பட்ட மண் அவ்வாறான மண்ணிலேயே சிங்கள் சகோதரர்கள் காணாமல் போயுள்ளனர்.

ஜனநாயகத்திற்காக செங்கோலில் சத்தியம் செய்கின்றோம். எனினும் நாட்டில் அநியாயமே நடக்கின்றது.

தென்பகுதியிலும் வடபகுதியிலும் தனியான ஆட்சியே நடைபெறுகின்றது என்பதை அரசு ஏற்றுக் கொள்கின்றதா? தெற்கில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களுக்கு இராணுவத்தினர், பொலிஸார் செல்வதில்லை.

எனினும் வடக்கு,கிழக்கு பாடசாலைகள், பல்கலைக்கழகங்களுக்கு படையினர் செல்கின்றனர். சகலவற்றுக்கும் புலிச்சாயம் பூசக் கூடாது என்றார். (அ-2)

## புதிய உயர்ஸ்தானிகராக ரொபின் மட் நியமிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் புதிய உயர்ஸ்தானிகராக ரொபின் மட் நியமிக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கெவின் ரூட் அறிவித்துள்ளார்.

இலங்கைக்கான தூதுவராக பணியாற்றி வரும் கேத்திக்ளுமன், அவுஸ்திரேலிய பிரதமர் மற்றும் அமைச்சரவை திணைக்களத்தின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதான அதிகாரியாக நியமிக்கப்பட உள்ளதால் இந்த புதிய தூதுவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய இலங்கைக்கான தூதுவரின் புதிய நியமனம் குறித்து அவருக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

திறமையை அடிப்படையாக கொண்டு க்ளுமனுக்கு இந்த உயர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

## புலம்பெயர்ந்த தமிழர்கள் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும்

### ஜனாதிபதி கருத்து

வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் தொடர்பில் நாட்டு மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

மிகிந்தலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொண்டு வரும் முன்னெடுப்புக்கள் எவையும் நிறுத்தப்படவில்லை.

இதனால் இலங்கைக்கு பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களின் செயற்பாடுகள் குறித்து இலங்கை மக்களுக்கும் உலக மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிறிதொரு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய ஜனாதிபதி சிவில் பாதுகாப்பு படையினருக்கு ஓய்வூதியம் வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

முப்படையினர் பயங்கரவாதத்தை முறியடித்து முன்னே சென்ற வெற்றிப் பயணத்தின் ஒரு பங்குதாரராக சிவில் பாதுகாப்புப் படையினரும் பங்களிப்பு வழங்கியிருப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முப்படையினரும் பொலிஸாரும் பெற்ற வெற்றியை பாதுகாக்கும் பொறுப்பு சகலருக்கும் உரியது என அவர் குறிப்பிட்டார். (அ-2)



கொழும்பு மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்றது. இதன்போது நிதிக்குழுவிற்கான அதிகாரத்தை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கைப்பற்றியதும் குறிப்பிடத்தக்கது.

## லிபியாவைப்போன்ற ஆட்சிமாற்றத்திற்கு சில சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன

### அமைச்சர் நிமால் தெரிவிப்பு

சில சர்வதேச சக்திகள் லிபியாவில் தாம் ஏற்படுத்திய ஆட்சிமாற்றத்தைப் போன்று இலங்கையிலும் மேற்கொள்வதற்கு சில குழுக்களை வளர்க்கின்றன என அரசாங்கம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.நாடாளுமன்ற ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் சபை முதல்வரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

ஜனநாயக வழிமுறைகள் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாதென்பதை இச்சக்திகள் அறியும்.

இச்சக்திகள் அந்நாட்டில் மக்களுக்கு நிதியளித்து அரசாங்கத்திற்கு எதிராக வீதியிலிறங்க வைத்தன.அதுபோன்ற நடவடிக்கை இங்கும் மேற்கொள்ளப்படுகின்றது. இதை நாம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மாணவர்களினதும் அரசியல் உரிமைச் செயற்பாட்டாளர்களினதும் உரிமைகளை நசுக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக ஜே.வி.பி. கிளர்ச்சிக்குழு நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் குமார கூறியமைக்கு பதிலளிக்கும் முகமாகவே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

மாணவர்களின் தலைவர்கள் எனக்கூறிக்கொள்ளும் சிலர் பகிடிவதை என்ற பெயரில் சக மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துகின்றனர்.பல்கலைக்கழக முறைமையிலிருந்து நாம் பகிடிவதையை ஒழிக்க வேண்டும் எனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

## 4000 வருடங்களுக்கு மேல் இலங்கை-இந்திய உறவு பழைமையானது

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள தொடர்பு நான்காயிரம் வருடங்களுக்கு மேல் பழைமையானது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தூரநோக்குள்ள வெளிநாட்டுக் கொள்கை காரணமாக அத்தொடர்பு மேலும் வளர்ச்சியடைந்து வருவதாகப் பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இந்திய வெளிநாட்டமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா பிரதமர் செயலகத்தில் பிரதமர் டி.எம்.ஜயரத்னவை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு அவ்வப்போது இந்தியா அதிகளவில் உதவியுள்ளதுடன் விசேடமாகப் பாதை அபிவிருத்தி மற்றும் புகையிரதப் பாதை அபிவிருத்தி போன்ற விடயங்களில் இந்தியாவின் உதவி குறிப்பிடத்தக்கது என்றும் அதற்காக இலங்கை அரசின் சார்பாக தனது நன்றியை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இச் சந்திப்பின் போது எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்ததாவது,

இலங்கை மக்களுக்கு இந்தியா பலவகைகளிலும் உதவி வருகிறது. குறிப்பாக இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் பௌத்த யாத்திரிகர்கள் விடயமாக பல்வேறு நலன் புரி நடவடிக்கைகளை செய்துள்ளது.

இதை விட நீண்ட காலமாக இரு நாடுகளுக்குமிடையே இருந்து வரும் சமூக, பொருளாதார ,கலாசார தொடர்புகள் காரணமாக இரு நாடுகளுக்குமிடையேபுரிந்துணர்வுசெயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா மற்றும் தூதுக் குழு அங்கத்தவர்கள், பிரதமரின் செயலாளர் எஸ்.அமரசேகர, இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்திய வெளிநாட்டு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மற்றும் பிரதமர் டி.எம்.ஜயரத்ன ஆகியோர் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக் கொண்டனர். (ஏ)

# அமெ.வின் உலங்குவானூர்தி தீப்பிடித்தது; ஆறு பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவம் முகாமிட்டு தீவிரவாதிகளுடன் போரிட்டு வருகின்றது.

இந்த நிலையில் தெற்கு ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி வானில் பறந்து சென்று கொண்டிருந்தது.

இது திடீரென தரையில் விழுந்து தீப்பிடித்து எரிந்தது.

இதில் பயணித்த 6 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.



இச்சம்பவம் எப்படி நடந்தது என தெரியவில்லை.

ஏனெனில் விபத்து நடந்த போது தெற்கு ஆப்கானிஸ்தான் பகுதிகளில் தீவிரவாதிகள் நடமாட்டம் எதுவும் இல்லை.

எனவே உலங்குவானூர்தி மீது தாக்குதல் நடத்த வாய்ப்பு இல்லை. இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உலங்குவானூர்தி நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளான போது கந்தகர் விமான நிலையத்தில் தற்கொலை தீவிரவாதி கார் குண்டுத் தாக்குதல் நடத்தினான்.

அதில் பொதுமக்கள் ஏழு பேர் உயிரிழந்தனர். (அ-2)

# கைதாவேன் என்ற பயத்தில் முஷாரப் நாடு திரும்புவதை ஒத்திவைத்தார்


பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் இம்மாதம் தாயகம் திரும்பும் திட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவர் கடந்த 2007 ஆம் ஆண்டில் தலைமை நீதிபதி உள்ளிட்டோரை பதவிநீக்கம் செய்து சிறையில் அடைத்து அவசர சட்டத்தைப் பிறப்பித்தார்.

அதன்பின் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு பதவியேற்றதும் அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகளின் நிர்ப்பந்தத்தால் முஷாரப் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார். இதுமட்டுமல்லாமல் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவுக்கு உரிய பாதுகாப்பு அளிக்காதது குறித்தும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது பிரிட்டன் மற்றும் அமெரிக்க நாடுகளில் அவர் தங்கியுள்ளார். பாகிஸ்தானில் தற்போது நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அவர் இம்மாத இறுதியில் நாடு திரும்பத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவர் நாடு திரும்பினால் கராச்சியிலேயே கைது செய்யப்படுவார் என சிந்து மாகாண உள்துறை அமைச்சர் மன்சூர் வசன் எச்சரித்திருந்தார். அது மட்டுமல்லாது பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பேசுகையில்,




முஷாரப் எப்போது நாடு திரும்பினாலும் இந்த நாட்டுச் சட்டப்படி கைதுசெய்யப் படுவர். இந்தத் தருணத்தில் அவர் பாகிஸ்தான் வந்தால் கூட அடுத்த நிமிடமே அவர் கைது செய்யப்படுவார் என்றார்.

இதுகுறித்து முஷாரப்பின் தகவல் தொடர்பாளர் முகமது அலி சயீப் குறிப்பிடுகையில்,

கைது நடவடிக்கைக்காக முஷாரப் பயப்படவில்லை. கட்சித் தலைவர்கள் மற்றும் நண்பர்களுடன் கலந்தாலோசித்த பின் அவர் பாகிஸ்தான் திரும்பும் திகதியை அறிவிப்பார் என்றார். (அ-2)

# கிலானி அவமதிப்பு வழக்கு அடுத்த மாதத்திற்கு ஒத்திவைப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் கிலானி மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சர்தாரி மீது ஊழல் வழக்கு தொடர்வது குறித்து கிலானி நிலை என்ன என்பதும் விளக்கப்பட்டது. இதனால் கிலானிக்கு ஏற்பட்ட நீதிமன்ற உத்தரவு நெருக்கடி சற்று குறைந்திருக்கிறது.

அவர் மீதான வழக்குகளை இரு ஆண்டுகளாக ஆரம்பிக்காதது ஏன் எனக் கேள்வி எழுப்பிய உயர் நீதிமன்றம் பிரதமர் கிலானிக்கு கடந்த 16 ஆம் திகதி நீதிமன்ற அவமதிப்பு நோட்டிஸ் அனுப்பியது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பலத்த பாதுகாப்புடன் பிரதமர் கிலானி நேற்று முன்தினம் காலை உயர் நீதிமன்றில் ஆஜரானார்.

இவர் சார்பில் வழக்கறிஞர் அய்ட்ஜாஸ் அசன் ஆஜரானார். நீதிபதி நசீர் உல் முல்க் தலைமையிலான ஏழுபேர் கொண்ட பெஞ்ச் இந்த வழக்கை விசாரித்தது. நீதிமன்ற உத்தரவை மதித்து ஆஜரானதற்காக நீதிபதிகள் கிலானிக்கு பாராட்டு தெரிவித்தனர்.

இருப்பினும் சர்தாரி மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த கிலானி,


ஜனாதிபதியாக பதவி வகிப்பவர் மீது உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி அரசியலமைப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாது.

எனினும் நீதிமன்றை அவமதிக்கும் நோக்கம் எதுவும் எனக்கு கிடையாது. நான் நீதிமன்ற நடவடிக்கைகளை மதிக்கின்றேன் என்றார்.

கிலானி சார்பில் வாதாடிய வழக்கறிஞர் அசன்,

வியன்னா மாநாட்டு ஒப்பந்தப்படி சர்தாரி மீது நடவடிக்கை எடுக்க முடியாது. ஜனாதிபதி பதவி வகிக்கும் சர்தாரி மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்று நீதிமன்றம் அறிவித்தால் மட்டுமே சுவிற்சர்லாந்து அதிகாரிகளை தொடர்புகொண்டு அவர் அங்கு வைத்துள்ள வங்கிக் கணக்கு குறித்த விபரங்களை கேட்க முடியும். ஜனாதிபதி மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்பதால் அந்த நாடும் இது இந்த விடயத்தில் ஒத்துழைக்காது என்றார்.

இதையடுத்து இந்த வழக்கு விசாரணை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)



ஐக்கிய அரபு நாடு அபுதாபியில் நடந்த உலக எதிர்கால உச்சி மாநாட்டில் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் சேக் அப்துல்லா பின் ஜயத் மற்றும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வென்ஜியாபோ கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

## உலக தரிசனம்

# அமெ. ஜனாதிபதி ஒபாமாவின் தேர்தல் வெற்றி சரிவடைந்துள்ளது–கருத்துக்கணிப்பில் தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா நவம்பர் மாதம் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிடுகின்றார்.

இவரது வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும் என்பது குறித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையும், சி.பி.எஸ் செய்தி நிறுவனமும் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தியது.

இதில் கட்சி சார்பற்ற வாக்காளர்கள் மத்தியில் ஒபாமாவின் செல்வாக்கு சரிந்து இருப்பதாக தெரியவந்தது.

பொருளாதார பிரச்சினைகளை சிறப்பாக கையாண்டார் என்பதற்கு 31 சதவீதம் பேர் ஆதரவாகவும் மூன்றில் இரண்டு பங்கு பேர் அதிருப்தியும் தெரிவித்தனர்.

மொத்தத்தில் ஒபாமாவுக்கு 38 சதவீதம் ஆதரவும் 45 சதவீதம் எதிர்ப்பும் காணப்பட்டது. 17 சதவீதம் பேர் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

அமெரிக்கா முழுவதும் ஆயிரத்து 154 பேரிடம் தொலைபேசி மூலம் கடந்த 12 ஆம் திகதி, 17 ஆம் திகதிகளில் இந்த கருத்து கணிப்பு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன. (அ-2)

# ஆப்கானில் குண்டுவெடிப்பு; 12 பேர் உயிரிழப்பு


ஆப்கானிஸ்தான் தெற்குப் பகுதியில் இருக்கும் ஹெல்மாட் மாகாணத்தில் 2 இடங்களில் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தினர். காஜாகி என்ற இடத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலை படை தீவிரவாதி குண்டை வெடிக்கச் செய்ததில் 10 பொது மக்களும் 2 பொலிஸாரும் பலியானார்கள்.

மேலும் 20 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இதையடுத்து சில மணி நேரத்தில் நாட்அலி என்ற இடத்தில் தலிபான் தீவிரவாதிகள் ரிமோட் மூலம் குண்டை வெடிக்கச் செய்தனர். இதில் இந்த மாவட்டத்தின் பாதுகாப்பு துணை இயக்குநர், அவரது பாதுகாப்பாளர் 2 பேர் மற்றும் பொதுமக்கள் ஒருவர் என 4 பேர் கொல்லப்பட்டனர். (அ-2)

# மன்மோகனும் ஏஞ்சலாவும் எனது உற்ற நண்பர்களாவர்

## ஒபாமா தெரிவிப்பு



ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மார்கெல் மற்றும் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர்எனதுநண்பர்கள்என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, பிரதமர் மன்மோகன் சிங் ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கெல் ஆகியோருடன் நட்பு மற்றும் நம்பிக்கையை வளர்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நான் ஏனைய நிர்வாகிகளைப் போன்று இல்லை. ஏனைய நாடுகளின் தலைவர்களையும் வேறுபடுத்தி பார்க்கவில்லை. மார்க்கெல், மன்மோகன்சிங், தென்கொரிய ஜனாதிபதி லீ மியூங் பாக், துருக்கி பிரதமர் ரெசிப் தாயிப் எர்டோகன், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோருடன் நெருங்கிய நட்புறவு வைத்துள்ளேன்.

இந்தத் தலைவர்களிடம் கேட்டால் அவர்களும் அமெரிக்கஜனாதிபதியுடன்உண்மை மற்றும் நம்பிக்கையைக் கொண்டிருந்ததாகவும் கூறுவார்கள்.

ஒருவர் கூறுவதை மற்றவர்கள்நம்புவார்கள். அவர்கள் தங்களதுஉறுதிமொழியைநிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கைஎங்களுக்குஉள்ளது.

எங்களது கவலை மற்றும் நலனில் அதிக கவனம் செலுத்துவார்கள் என்றார். மேலும் வளர்ந்து வரும் நாடுகளான இந்தியா, பிரேசில், சீனா ஆகியவற்றை அமெரிக்கத் தலைவர்கள் அங்கீகரித்துள்ளதாகவும் கூறினார். (அ-2)

# ஏவுகணை தயாரிப்பில் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார்

# அமெரிக்கா அறிவிப்பு

கண்டம் விட்டு கண்டம் பாயும் நவீன தொழில்நுட்பத்துடனான அணு ஆயுதங்களை ஏந்தி செல்லும் ஏவுகணைகளை தயாரிப்பதில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட தயார் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

நெருங்கிய நட்பு நாடான ரஷ்யாவுடன் இந்தியாவுக்கு பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளது. மேலும் இருநாடுகளும் இராணுவ துறையில் முழு ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறது. இந்தியாவுக்கு நவீன போர் விமானங்கள், போர்க்கப்பல்கள்,மற்றும் ஆயுதங்களை ரஷ்யா விற்பனை செய்து வருகிறது.

மேலும் அந்த போர்வி மானங்களையும் போர்க்கப்பல்களையும் இந்திய இராணுவ வசதிக்கு தகுந்தவாறு மாற்றி அமைத்துக் கொள்ளவும் ரஷ்யா அனுமதி அளித்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்காவுடனும் இந்தியாவின் நட்புறவு மீண்டும் வளர்ந்து வருகிறது. இருநாடுகளுக்கும் விஞ்ஞான, தொழில் நுட்பம்,கல்வி, அணுசக்தி மற்றும் இராணுவத்துறையில் பல்வேறு ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளன.இந்தியாவுடன் இராணுவ ஒத்துழைப்பை அதிகரிக்க அமெரிக்கா ஆர்வம் காட்டி வருகிறது. கடந்த பல வாரங்களுக்கு முன்பு நவீன போர் விமானங்களான எம் 35 ஐ இந்தியாவுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா முன்வந்தது.

இந்தியா, அமெரிக்கா இடையே இராணுவ உறவானது தெற்காசிய பிராந்தியத்திற்கும் மட்டுமல்லாது உலக அளவில் பாதுகாப்பு மிகுந்தது என்று அமெரிக்க இராணுவத்துணை அமைச்சர் ராபர்ட் ஸ்செர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு பாதுகாப்பு சம்பந்தமான ஆயுதங்களையும் வழங்கும் நாடாக அமெரிக்கா இருக்கும் என்று ஸ்செர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## விசாரணை ஒத்திவைப்பு


சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டதற்காக பேஸ்புக்,கூகுள் உட்பட21 இணையத்தளங்களுக்கு டில்லி கீழ் நீதிமன்றில் கடந்தாண்டு டிசெம்பர் 23 திகதி சம்மன் அனுப்பியது.

இதனை எதிர்த்து பேஸ்புக்,கூகுள் இணையத்தளங்கள் டில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி சுரேஸ் கைத் வழக்கு விசாரணையை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.இந்த வழக்கு தொடர்பாக கடந்த விசாரணையின் போது இணையத்தளங்களில் உள்ள சர்ச்சைக்குரியவற்றை நீக்கவேண்டும். இல்லையென்றால் சீனாவை போல அவற்றை இந்தியாவிலும் தடைசெய்ய நேரிடும் என நீதிபதி எச்சரிப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

## இத்தாலி கப்பல் விபத்தில்; சிக்கிய 15 பேர் இந்தியாவுக்கு திரும்பினர்



(புதுடில்லி)

இத்தாலி நாட்டின் கடற்பகுதியில் விபத்துக்குள்ளான கோஸ்டா கன்கார்டியா கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இந்தியர்களில் 15 பேர் நேற்று முன்தினம் இந்தியா திரும்பினர்.

புதுடில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர்களுக்கு உதவி செய்ய வெளிவிவகாரத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கப்பலில் பயணித்த 203 இந்தியர்களில் ஒருவர் சுற்றுலாப் பயணி மற்றவர்கள் கப்பலில் பணிபுரிபவர்கள். விபத்தின் போது ஒரு இந்தியர் காணாமல் போய் விட்டார். ஒருவர் கப்பலிலேயே தங்கிவிட்டார். மீதமுள்ள 201 பேர் மீட்கப்பட்டனர்.

கப்பலில் பணிபுரிந்த இந்தியர்களுக்கு கப்பல் நிறுவனம் நிலுவைத் தொகைகளை அளித்துவிட்டது.

இந்திய உதவிக் குழுவும் அவர்களுக்கு கருணைத் தொகையாக ரூபா ஆறாயிரத்திற்கும் கூடுதலான தொகையை வழங்கியுள்ளது. தாங்கள் காப்பாற்றப்பட்டது குறித்து பயணிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். மீட்கப்பட்டவர்களில் அடுத்த பகுதியினர் விரைவில் நாடு திரும்புவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-2)

## பாரதச் செய்தி

## கொமன்வெல்த் போட்டி ஒருங்கிணைப்பாளர் கல்மாடிக்கு உயர் நீதிமன்றம் பிணை வழங்கியது



கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஒருங்கிணைப்பாளர் சுரேஷ்கல்மாடிக்கு டில்லி உயர்நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளதால் 2ஜி அலைக்கற்றை வழக்கில் இதுவரை பிணை பற்றி யோசிக்காத ராசா, விரைவில் மனுத்தாக்கல் செய்யலாம் எனக் கூறப்படுகிறது.

2ஜி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கடந்த ஒரு வருடமாக முன்னாள் அமைச்சர் ராசா கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இதுவரை அவர் பிணை கோரி மனுத்தாக்கல் ஏதும் செய்யவில்லை. இந்நிலையில் ராசாவின் வழக்கறிஞர்கள் கூறுகையில், கொமன் வெல்த் போட்டி ஊழலில் சி.பி.ஐ. தாக்கல் செய்ய குற்றப்பத்திரிகை மற்றும் அதைத் தொடர்ந்து தாக்கல் செய்த இரண்டு துணை குற்றப்பத்திரிகையிலும் கல்மாடியின் பெயர் இடம்பெற்றது.

ஆனால், 2ஜி வழக்கில் சி.பி.ஐ. தாக்கல் செய்த இரண்டாவது துணை குற்றப்பத் திரிகையில் ராசாவின் பெயர் இல்லை. மேலும் குற்றசாட்டுகளின் அடிப்படையில் பார்த்தால் ராசாவுக்கும், கல்மாடிக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.எனவே, கல்மாடிக்கு டில்லி உயர்நீதிமன்றம் கொடுத்த பிணை உத்தரவை முழுமையாக படித்த பின் மனுத்தாக்கல் செய்வது குறித்த ராசா முடிவு செய்வார் என்றனர்.

(அ-2)

## மகாத்மாகாந்திக்கு அவுஸ்திரேலியாவில் வெண்கலத்தினாலான சிலை திறப்புவிழா



அவுஸ்திரேலியாவில் மகாத்மா காந்தியின் வெண்கலத்தினாலான சிலை திறக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் மகாத்மா காந்தியின் அகிம்சை கொள்கைக்கு உலகம் முழுவதும் புகழ், மதிப்பு, மரியாதை அதிகரித்து வருகிறது. அகிம்சை என்ற ஆயுதத்தால் தான் மாபெரும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து இந்தியாவை விடுவித்தார்.

அவருக்கு அவுஸ்திரேலியாவின் தெற்கு பகுதியில் உள்ள அடிலைடு பல்கலைக் கழகத்தில் வெண்கலத்திலான சிலைவடிவமைக்கப்பட்டு வைக்கபட்டுள்ளது. சிலையின் உயரம் 195 செ.மீற்றராகும். சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் மிகப்பிரமாண்டமான முறையில் நடந்தது. சிலையை தெற்கு அவுஸ்திரேலிய பிரதமர் ஜாய் வெல்த்திரில் திறந்து வைத்தார்.சிலை திறப்பு விழாவில் பல்கலைக்கழக வேந்தர் ,துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்தச் சிலையை அவுஸ்திரேலியாவுக்கு இந்திய அரசு பரிசாக கொடுத்துள்ளது. கொல்கத்தாவை சேர்ந்த பிரபல சிற்பி கௌதம் பால் வடிவமைத்துள்ளார்.

முன்னதாக சிலையை திறந்து வைத்து பேசிய ஜாய் வெத்திரில் மகாத்மா காந்தியின் இந்த வெண்கல சிலையானது இந்தியாவுக்கும் தெற்கு அவுஸ்திரேலியாவிற்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வரும் தொடர்பை வெளிக்காட்டும் வகையில் உள்ளது என்றார். உலகத்திலேயே இந்தியா ஒரு மாபெரும் ஜனநாயக நாடாக விளங்குகிறது. இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் பல்வேறு துறைகளில் ஒருங்கிணைந்து செயற்பட்டுவருகிறது. ஆராய்ச்சி மற்றும் கல்வியில் இருநாடுகளும் ஒருமித்த கருத்துடன் மட்டுமல்லாது ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

மகாத்மா காந்தியின் சிலையில் தத்துவ வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தியா மட்டுமல்லாது உலக அளவில் இந்த நவீன வரலாற்றில் மகாத்மாகாந்தி முக்கிய பங்கு வகிக்கிறார். அவருடைய வெண்கல சிலையை எங்களுக்கு இந்திய அரசு பரிசாக கொடுத்திருப்பதை பெருமையாக கருதுகிறோம் என்று பல்கலைக்கழக துணைவேந்தர் பேசுகையில் கூறினார். (அ-2)



டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கை சீன மாகாண கவுன்சிலர் டாய் பிங்குவோ சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

உலகம் ஓர் உருண்டை. அதை உருட்டிவிட்ட பக்கம் அது உருளும். அதே சமயத்தில் அதற்கு இஷ்டப் பட்ட பக்கமும் அது சுழலும். - ஸ்ராலின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழக அரசை கைவிட்டுவிட்டு மத்திய அரசை உசார்படுத்த முடியாது!

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இருக்கக்கூடிய சர்வதேச அழுத்தத்தை தகுந்தமுறையில் தமிழ் அரசியல் தலைமைகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை கூறித்தான் ஆக வேண்டும்.

குறிப்பாக எங்கள் பிரச்சினையில் அதிக அக்கறைகாட்டிய அமெரிக்காவின் உதவியைப் பெறுவதில் தமிழ் அரசியல் தலைமைகள் கரிசனை காட்டவில்லை என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

உண்மையில் அமெரிக்காவின் தலையீடு, அதன் அழுத்தம் என்பவற்றின் அணுகுமுறை வித்தியாசமானதாக இருக்கும்.

இந்தியாவிடம் இலங்கை அரசு பேசுவது போல அமெரிக்காவிடம் பேசமுடியாது.

அதேநேரம் ஈழத் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைப்பதில் இந்திய மத்திய அரசு நூறு வீத விருப்புடன் செயல்படும் என்றும் கூறிவிட முடியாது.

ஈழத் தமிழ் மக்களுக்கு கிடைக்கின்ற தீர்வானது தமிழக மக்களை எந்த வகையிலும் உசார்படுத்துவதாக இருத்தலாகாது என்பதில் இந்திய மத்திய அரசு மிகவும் நிதானமாக இருக்கின்றது.

எனவே, இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை ஈழத் தமிழ் மக்களின் உரிமை என்பது இலங்கை அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்படுகின்றது.

அதேநேரம், விடுதலைப்புலிகள் மீண்டும் எழுச்சி பெறலாகாது என்பதிலும் இந்திய மத்திய அரசின் உறுதி நிலையை அதன் செயற்பாடுகளில் இருந்து உணரமுடியும். இருந்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இந்தியாவை மலையாக நம்புகின்றது.

அதேநேரம், கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது தமிழக அரசுடன் இருந்த தொடர்பை ஜெயலலிதாவின் அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கவில்லை என்பதும் தெளிவு.

கலைஞர் கருணாநிதி எங்கள் பிரச்சினையில் நடித்தார். ஆனால் முதல்வர் ஜெயலலிதா விரும்பியோ விரும்பாமலோ எங்கள் நிலைவரம் தொடர்பில் தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி தனது பற்றுதலை பகிரங்கப்படுத்தினார்.

எனினும் எங்கள் தொடர்பில் தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதாவின் தற்போதைய நிலைப்பாடு தாழ்நிலையிலேயே உள்ளது.

இதற்கு காரணம் முதல்வர் ஜெயலலிதாவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு திருப்திகரமான தொடர்பாடலை கொண்டிருக்கவில்லை என்றே கூறவேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசை இந்திய மத்திய அரசு வலிறுத்த வேண்டுமாயின் அதனை தமிழக அரசும் தமிழக மக்களுமே செய்தாக வேண்டும்.

எங்கள் கோரிக்கைகளை விட தமிழக மக்கள் விடும் கோரிக்கைக்கு மத்திய அரசு செவி சாய்க்காமல் இருக்க முடியாது.

ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எஸ்.எம். கிருஸ்ணாவைச் சந்தித்த பின்னர் பெரிய இடத்தைப் பிடித்துவிட்டோம் இனி எதற்கு தமிழக அரசு என்று நினைக்கிறது போலும்.

எதுவாயினும், ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை துரிதப்படுத்துமாறு தமிழக அரசு மத்திய அரசுக்கு சதா நச்சரிப்புக் கொடுத்தால் மத்திய அரசு ஏதோ செய்தாக வேண்டும் என்ற முடிபுக்கு வரும்.

இதைவிடுத்து அங்கும் இங்குமாக அலைந்து இறுதியில் வெறுங்கையாகிக் கொள்வது புத்திசாலித்தனமான செயல் அல்ல.

# அடையாளம் காணப்பட்ட சில துறைகளுக்கு வரிச்சலுகை வழங்க தீர்மானம் - அமுனுகம



(கொழும்பு)

அடையாளங் காணப்பட்ட குறிப்பிட்ட சில துறைகளுக்கு வரிச்சலுகை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். வரிச்சலுகை வழங்குகையில் ஏதும் குறைபாடுகள் ஏற்பட்டால் மேன்முறையீடு செய்வதற்கு வரி மேன்முறையீட்டு சபையொன்றும் அமைக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முதலீட்டுச்சபை (திருத்தச்) சட்ட மூலம், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்ட மூலம் என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன் போது மேலும் உரையாற்றிய அமைச்சர், வரி ஆணைக்குழு நியமித்து அதன் சிபார்சுகளின்படி கடந்த வரவு செலவுத் திட்டத்தினூடாக பல்வேறு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. குறிப்பிட்ட துறைகளுக்கு வரி நிவாரணம் வழங்கவும் ஏனைய துறைகளில் இருந்து வரி அறவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டு சபையினூடாக வழங்கப்பட்ட வரிச்சலுகைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது. புதிய சட்டத் திருத்தப்படி ஏதும் நிறுவனத்திற்கு வரிச் சலுகை வழங்குகையில் குறித்த நிறுவனம் பற்றிய சகல விபரங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

வேறு எந்த நாட்டிலும் இவ்வாறு செய்யப்படுவது கிடையாது. 3மாத காலத்தில் இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும்.

விவசாயம், தகவல் தொழில்நுட்பம், கல்வி, சுற்றுலா, விளையாட்டு போன்ற துறைகளுக்கு வரி நிவாரணம் வழங்கப்படும். புதிய வரி நிர்வகிப்பின் போது சில குறைபாடுகள் ஏற்படலாம்.

இதனால் பாதிக்கப்படுவோர் இது தொடர்பில் மேன்முறையீடு செய்ய முடியும். அதற்காக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு உச்ச நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஒருவரும் வரி மற்றும் நிதி தொடர்பில் பரந்த இருவரும் இதில் அங்கம் வகிப்பர்.

இந்த விசாரணையின் போது முறைப்பாடுகள் தொடர்பாக 18 நாட்களில் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற காலக்கெடு 270 நாட்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

வெட் மோசடி தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படுகிறது. அரச கணக்காய்வு குழு, கோப் என்பவற்றினூடாகவும் இது தொடர்பில் விசாரிக்கப்படுகிறது.

வரி ஆணைக்குழுவின் அறிக்கை இவ் வருட இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். (அ-2)

# அரசியல் கைதிகளின் விபரங்களை பதிவு செய்ய கோரிக்கை

தமிழ் தேசிய கைதிகளின் விடுதலை சம்பந்தமாக பாதுகாப்பு செயலாளருடன் சந்திபொன்று ஏற்படுத்த விருப்பதாகவும் அதனால் தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் வேண்டுகோள் விடுத்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பலவருட காலமாக புலி சந்தேக நபர்களாக சிறைச்சாலைகளில் வாடி வரும் அரசியல்கைதிகளின் விடுதலை சம்பந்தமாக ஈடுபட்டுள்ளேன். ஒருசில கைதிகள் சம்பந்தமான விபரங்களை சம்பந்தப்பட்டவர்கள் இல.11, ஹேக் வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு-04இல் இருக்கும் எனது அலுவலகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். அல்லது 2593 919/ 0779698937 என்ற இலக்கத்திற்கு தொலைபேசி மூலமாக முழுமையான விபரங்களை தெரிவிக்குமாறு அவரது ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## படகுச் சேவை நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேச செயலக குமுதினி படகு சேவை மட்டும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் என நெடுந்தீவு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்படகு சேவையானது இதுவரை காலமும் தினமும் காலை 9 மணிக்கு குறிகாட்டுவானில் இருந்து இடம்பெற்றதாகவும் ஏனைய படகுச்சேவைகள் வழமைபோல் இடம்பெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ)

# 35 ஆயிரத்து 485 ஏக்கரில் பெரும்போக பயிர்செய்கை

மன்னார் மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான பெரும்போக நெற்பயிர்ச் செய்கை கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை 35 ஆயிரத்து 485 ஏக்கரில் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கே.எம்.ஏ சுக்கூர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் 2011/ 2012 ஆம் ஆண்டிற்கான பெரும்போக நெற்பயிர்ச்செய்கை 51 ஆயிரத்து 465 ஏக்கர் நிலப்பரப்பில் செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடங்களில் நெற்பயிர்ச் செய்கை செய்யாமல் உள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பிலும் விவசாயம் செய்வதற்குதிட்டமிட்டுள்ளதாக பணிப்பாளர் சுக்கூர் தெரிவித்துள்ளார். (அ-2)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரன் ,சிறப்பு விருந்தினராக மாரீசன் கூடல் பங்குத்தந்தை அருட்திரு எம்.எம். எச். ஞானேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஒவ்வொரு உயிரிலும் கடவுள்

சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும்.ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்த போது சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார்.



ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியை கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள் .மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்ற பின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டு செல்லுங்கள்.

உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள் . காலம் எல்லாம் அழுது கொண்டிருந்ததுபோதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும் தான் எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான்.

கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை

# யுத்தத்தின் பின்னரான ம.உ. நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

## மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**யுத்த நிறைவின் பின்னர் இடம்பெற்ற காணாமல் போதல் மற்றும் கடத்தல் சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் சர்வதேச மன்னிப்புச்சபை உள்ளிட்ட பல மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.**

ஜே.பி.வி. கிளர்ச்சிக்குழு ஊறுப்பினர்களான லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போன சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை மாநாட்டில் கேள்வி எழுப்பப்படலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இருவரும் காணாமல் போன சம்பவம் குறித்து உரிமைப் பேரவை ஏற்கனவே விசாரணை ஆரம்பித்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து காணாமல் போன இருவரினதும் குடும்ப உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைக் கிளை யில் உத்தியோகபூர்வ முறைப்பாடு செய்துள்ளனர்.

காணாமல் போதல் சம்பவம் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முக்கிய கவனம் செலுத்தியுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கை பணிப்பாளர் ஜேம்ஸ் ரோஜ் தெரிவித்துள்ளார்.

லலித், குகன் காணாமல் போதல் சம்பவத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கொண்டு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் எவ்வாறு அமுல்படுத்தும் என்பதனை புரிந்துகொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசாங்கத்திடம் மீளவும் கோரியுள்ளது. (அ-2)

## போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைதானர்

ஒருதொகை போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த தனியார் பஸ் வண்டி ஒன்றில் நடத்துநருக்கு போலி 100 ரூபாவைக் கொடுத்த போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை பரிசோதித்த போது 2 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் ஒன்பது, ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் 39, நூறு ரூபா போலி நாணயத்தாள்கள் 21, மற்றும் 50 ரூபா போலி நாணயத்தாள்கள் நான்கும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர் தெல்வத்த ஹிக்கடுவ பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

# பிள்ளையார் சிலையை அகற்றுமாறு விடத்தல்தீவுப் பொலிஸார் உத்தரவு

மன்னார். மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் கிராமத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் சிலையினை உடனடியாக அகற்றுமாறு விடத்தல் தீவு பொலிஸார் நேற்று முன்தினம் மாலை உத்தர விட்டுள்ளதாக குறித்த கிராம மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.விேனாநோதராதலிங்கம் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

குறித்த கிராம மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலம் முதல் இதுவரை அக் கிராமத்தில் வழிபடுவதற்கு எவ்வித வழிபாட்டுத்தலங்களும் இல்லாத நிலை காணப்பட்டுள்ளன.

பொங்கல் தினத்தன்று சன்னார் கிராம மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பிள்ளையார் சிலை ஒன்றை வைத்து பொங்கல் தின வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மாந்தை மேற்கு பிரதேச சபையின் அரச தரப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் குறித்த பிள்ளையார் சிலை வைத்து வழிபட்டு வந்தமைக்கு எதிராக விடத்தல் தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்துள்ளார். இந்த நிலையில் வந்த விடத்தல் தீவு பொலிஸார் உடனடியாக குறித்த பிள்ளையார் சிலையினை அகற்றுமாறு தம்மிடம் உத்தரவிட்டுள்ளதாக அம் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ-2)

# அதிகாரப் பகிர்விற்கு எதிராக வீரவன்சவும் சம்பிக்க ரணவக்கவும் தோன்றுவார்கள்

## கே.டி. லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகார பகிர்வுக்கு எதிரான திரைப்படத்தில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் தோன்றுவார்கள் என்றும் இந்தச் திரைப்படத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இயக்குவார் என்றும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தில் தலைவர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அதிகார பகிர்வுக்கு எதிராக விமல் வீரவன்ச தீக்குளிக்க இருப்பதுடன் சம்பிக்க ரணவக்க மொட்டையடித்து துறவறம் பூணுவார்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான இந்தியாவின் தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா? அல்லது இல்லையா என்பதனை ஆளும் கட்சி மக்களுக்கு தெளிவாக அறிவிக்க வேண்டும்.


தற்போது அரசாங்கமோ ஜனாதிபதியோ அதிகார பகிர்வு குறித்து பேசவில்லை. இன்னும் சில தினங்களில் அதிகார பகிர்வு குறித்து இருவர் பேசுவார்கள்.

சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் இது தொடர்பில் பேசுவார்கள்.

அதிகார பகிர்விற்கு எதிராக மக்களைத் திரட்டி போராட்டம் நடத்துமாறு ஜனாதிபதி இருவருக்கும் அனுமதி வழங்கியுள்ளார்.


அதிகாரப் பகிர்விற்கு தாம் இணங்கிய போதிலும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களும் மக்களும் விரும்பவில்லை எனக் கூறுவதனையே ஜனாதிபதி விரும்புகின்றார் எனக் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.


அகில இலங்கை போக்குவரத்து சேவை சங்கத்தின் 14 ஆம் ஆண்டு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)




















யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது .இதில் யாழ்ப்பாணம் தொழில்துறை வர்த்தக மன்றத்தின் தலைவர் க. பூரணச்சந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இந்தியத்துணைத்தூதுவர் வி.மகாலிங்கம், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் குமார மல்லவராச்சி ஆகியோர் உரையாற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கண்காட்சியை நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் ஏனைய விருந்தினர்கள் அருகில் நிற்பதையும் கண்காட்சியை பொதுமக்கள் சகிதம் விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் அலுவலகச் செய்தியாளர்)

# 30 ஆயிரம்...

அழைத்து வரப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இவ் வழக்கின் விசாரணைகள் முடிந்த பின்னர் நீதிமன்றிலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதே கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் சரத் பொன்சேகா இக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வைத்து அண்மையில் கடத்தப்பட்டு பின்னர் காணாமல் போன லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் விவகாரத்திலும் யாழ்ப்பாண படைத்தளபதியே செயற்பட்டுள்ளார் எனத் தெரிவித்த சரத் பொன்சேகா, இச் சம்பவத்துக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சரத் பொன்சேகாவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள ஹைகோப் வழக்கை தொடர்ந்து முன்னெடுப்பதா, இல்லையா என்பது தொடர்பான தீர்ப்பை பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வெளியிடுவதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இவ்வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இதனை பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி க்கு நீதிபதி ஒத்திவைத்துள்ளார்.

படைத்தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகித்த காலத்தில் ஆயுதக் கொள்வனவில் நிதி மோசடிகளில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டி சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தொடுத்திருந்தார்.

இதே குற்றச்சாட்டில் இராணுவ நீதிமன்றம் பொன்சேகா மீது 30 மாத கால சிறைத் தண்டனையை ஏற்கனெவே வழங்கியிருப்பதால் இந்த வழக்கை முன்னெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி மனு ஒன்றை தாக்கல் செய்திருந்த போதிலும், அரச சட்டத்தரணி இதனை நிராகரித்திருந்தார்.

சரத் பொன்சேகாவின் மருமகனான துமிந்த திலகரட்ண இந்த வழக்கின் இரண்டாவது பிரதிவாதியாகக்குறிப்பிடப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்வதற்கு இன்ரர்போலின் உதவியையும் நீதிமன்றம் நாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)


ஓம் சக்தி



நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில்

நாகம்மாளாச்சிக்கு அரோகரா!
குடமுழுக்குக் காண குடுத்து வச்சோமம்மா! - எங்கள்
குறைகளைக் தீர்ப்பாயம்மா!

## நயினை ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபியில் சிறப்பு அன்னதானம்.

ஆவினது மகனுக்கு அட்சம் தந்து
அடுத்து வந்த மேகலைக்கு சுரபி தந்து
மேவிவரும் அடியவர்க்கு அமுதந்தந்து
மேன்மேலும் பெருங்கருணை அள்ளித்தந்து
தேடி வரும் அன்பர் குறை தீர்த்து
ஆன்ம சித்தியுடன் முத்தி பெற வைத்து இன்பம்
கோடிதரும் நயினையுறை நாகம்மாளே!
குண்டலியே குடமுழுக்கு ஆடிரம்மா (ஷண்)

அம்பிகை அடியார்களே!

நயினாதீவு அருள் மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29.01.2012 ந் திகதி இனிதே நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடி நிற்கின்றது. இத்திருநாட்களில் அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களின் நன்மை கருதி ஆலய அறங்காவலர் சபையின் வேண்டுதலின் பெயரில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் 'அமுதசுரபி' அன்னதான மண்டபத்தில் 20.01.2012 – 08.02.2012 வரையும் சிறப்பு அன்னதானப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ள தென்பதை மகிழ்வுடன் அடியார்களுக்கு அறியத்தருவதுடன், தங்களின் ஆலய தரிசனங்கள் நிறைவு பெற்றதும் அமுதசுரபி மண்டபத்திற்கு வருகை தந்து தங்கள் பசிப்பிணியையும் நீக்கிச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு.கு : திருக்குட முழுக்கு விழா சிறப்பு அன்னதானப் பணிக்கு பணம், பொருள் வழங்க முன்வரும் அடியார்கள் நேரிலோ அல்லது யாழ்ப்பாணம் வெற்றிலை மார்க்கட் திரு.சி.சிவகுமார் (சபை உறுப்பினர்) அவர்களிடமோ அல்லது திருநெல்வேலி தேனு களஞ்சியத்திலோ வழங்கி உரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

பிரதான சாலை, நயினாதீவு 2, ஓம் சக்தி துணை இங்ஙனம் : நிர்வாகம்
தொ.பே.:-0213213575 (சி-5611) ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை



## நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1927 12 28 ❀ உதிர்வு 2011 01 31



சீனித்தம்பி தர்மலிங்கம்

14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1961 08 28 ❀ உதிர்வு 1998 01 28



தர்மலிங்கம் சத்தியசீலன்

திதி 21.01.2012 திரியோதசி

ஏர்பிடித்து எமையெல்லாம் வாழவைக்க
இரவுபகல் பாராது அயராது உழைத்தீர்
நாம் வாழ நல்லனவெல்லாம் தேடித்தந்த
எமதன்புப் பேரின்பத் தெய்வமே
ஆண்டொன்று அல்ல ஆயிரமானாலும்
ஆறாது உங்கள்துயர் எம் நெஞ்சங்களில்

மாரியம்மன் வீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய் -குடும்பத்தினர்-


# காணாமல்...

பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவர் மேலும், தெரிவிக்கையில் வடக்கு கிழக்கில் போர் நிறைவடைந்துள்ள போதிலும் சில பயங்கரவாதிகள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயற்சி செய்து வருகின்றன.

பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு காணாமல் போவோர் குறித்து அரசாங்கமோ இராணுவமோ பொறுப்புச் சொல்லாது சில வெளிநாட்டு நிறுவனங்கள் பயங்கரவாதிகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றன.

தமிழீழ விடுதலைப்புலி அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பில் புலனாய்வுத்தரப்பினர் தொடர்ந்தும் அவதானித்து வருகின்றனர்.

யுத்த ரீதியாக தமிழீழ விடு தலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் அந்த அமைப்பின் கொள்கைகளை பின்பற்றும் நபர்கள் இருப்பதை மறந்து விடக்கூடாது எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ வலியுறுத்தினார். (எ-5)

# வவுனியாவில்...

முத்தையா பரமேஸ்வரி ஆகிய இருவருமே இவ்வாறு வெட்டி படு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது பெண்ணின்சடலம்வீட்டிற்குஅருகாமையிலும் அவரது கணவரின் சடலம் வீட்டில் இருந்து சற்று தொலைவில் காணப்பட்டதாகவும் அப்பிரதேசத்தின் கிராம சேவகர் தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட இருவரது கைகளிலும் மோதிர விரல் வெட்டப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையாளிகள் கந்தையா முத்தையாவை வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திற்கு அழைத்துச் சென்று கைவிரலை வெட்டி மோதிரத்தைக் கழற்றிக் கொண்டதுடன் அவரை அந்த இடத்திலேயே கொலையும் செய்துள்ளனர். அவரதுமனைவியான முத்தையா பரமேஸ்வரியை அவர்களது வீட்டுப்பகுதியில் வைத்தே கொலை செய்துள்ளனர். சுமார் 35 பவுண் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட இருவரும் அண்மையில் தான் இலண்டனிலுள்ள தமது பிள்ளைகளை பார்த்து விட்டு நாடு திரும்பி தமது காணியில் தற்காலிகக் கொட்டிலில் குடியிருந்து வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றிரவு திருமதி பரமேஸ்வரி தனது இரவு உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று சம்பவ இடத்திற்கருகில் இருப் பவர்கள் தெரிவிக்கின்றனர். ஏனெனில் சமையலறையில் வேக வைத்து எடுத்துவைக்கப்பட்ட ஒரு றொட்டியும் ஒரு றொட்டி அடுப்பிலிடுவதற்குத் தயாராக இருந்ததாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தைக் கேள்விப்பட்டதுடன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகரசபைத் தலைவர் ஐ.கனகையா, வவுனியா பிரதேசசபை தவிசாளர் சிவலிங்கம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில்சென்று பார்வையிட்டனர்.

ஏராளமான பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினருக்கும், இராணுவத்தினரும் அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர். மேற்படிச் சம்பவம் மீள் குடியேறிய மக்கள் மத்தியில் ஒரு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-5)

# பொலிஸ் அதி...

உறுதியாக கூறிவிட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளதாக இவ்வூடகம் தெரிவித்துள்ளது.

மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட பல அமைச்சர்கள் கடும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளதாக இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது.

அதேவேளை மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# அமெரிக்க...

அத்தோடு குடாநாட்டில் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது எனவும் மக்களின் வாழ்வாதாரம் எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது எனவும் கேட்டிருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இக்குழுவினர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையையும் சந்தித்து கலந்துரையாடினர். (எ-6,4)

# இந்தியாவும்...

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் எடுக்கப்பட்ட செய்மதிப் படங்களை மூர்ஸ் வெளிவிவகார அமைச்சரிடம் காண்பித்துள்ளார்.

எங்கிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறித்த துல்லியமான தரவுகளை செய்மதிப் படங்களின் மூலம் அறிந்து கொள்ளமுடியாது என அமைச்சர் போகொல்லாகம சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த செய்மதிப் படங்களை தாமும் பார்வையிட்டதாக ஜனாதிபதி மகிந்த, மூர்ஸிடம் தெரிவித்துள்ளார்.

எறிகணைத் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த செய்மதிப்படங்களை பகிர்ந்து கொள்வதாக ஜேம்ஸ் மூர்ஸ் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவும் அமெரிக்காவும் செய்மதி மூலம் இறுதிக்கட்ட யுத்தத்தை கண்காணித்து வந்ததாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-5)

# சிக்கலில்...

வேண்டும் என கோரி கர்நாடக மேல் நீதிமன்றில் கிருஸ்ணா கோரியிருந்தார். ஆனால் நீதிமன்றம் இவரது மனுவை ஏற்க மறுத்து விட்டது. இந்த விவகாரத்தில் தலையிட முடியாது என தெரிவித்து விட்டால் இந்த விசாரணை இன்னும் வேகமாக நடக்கும் பட்சத்தில்இவருக்கு எதிரான முடிவுகள் வரும். இப்போது இவர் பதவியை பறிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும்நிலைக்குள்ளாகியிருக்கிறார்.

நேற்றைய உத்தரவு குறித்துதான் கருத்து எதுவும் கூற விரும்ப வில்லை என கிருஸ்ணா கூறினார். (எ-5)

**ஆங்கிலம் விற்பனைப்பொருள் இல்லை**

MyWay மாணவர்களை விட சரளமாக கதைக்க அல்லது எழுத வேறு தனியார் கல்விநிறுவன மாணவர்களால் முடியுமாய் இருப்பின் முதல் நபருக்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படும் (தை 31 வரை)

மாணவர் பயிற்சியில் சேர்ந்த திகதி, பயிற்சிபெற்ற காலம், சேர்ந்து பயிற்சி பெற்ற மாணவர் விபரத்துடன் எந்தவொரு தனியார் கல்வி நிறுவனமும் மாணவரை போட்டிக்கு அனுப்பலாம்

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் (இன்று)

NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி காலை 8.00 – 9.00

நகரசபை அருகில், ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி 10.00 – 11.00

182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 2.00 – 3.00

இலங்கை வங்கி மேல்மாடி, சங்கானை மாலை 4.00 – 6.00

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456 222 9505

**சமையல் ஆட்கள் தேவை**

நல்லூரில் இயங்கும் உணவகத்திற்கு சமையல் ஆட்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 0775473124; 0213209066

**உதவியாளர் தேவை**

எமது ஆலயத்தில் பூசகருக்கு உதவியாளர் தேவை.

தொடர்பு: 0212229947

ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம். (7335)

வடமராட்சிப் பகுதியில் அச்சகம் ஒன்றில் பணியாற்ற பணியாளர் தேவை.

ஏற்கெனவே அச்சகத்தில் பணிபுரிந்தவர்களும், பழக விரும்புவர்களும், Type Setting, Binding தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

உடனடி தொடர்புக்கு: 0783035181 (7334)

**அவுஸ்திரேலியா குடும்ப விசா**

இதுவரையில், எம்மிடம் ஆலோசனை பெற்று அவுஸ்திரேலியா 5 வருட விசா பெற்று குடியேறியோர் (3) குடும்பங்கள் விபரங்களைப் பார்வையிடலாம்.

திசைகாட்டி பிறைவேற் லிமிடெட்

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 0212219016 (7338)

# மரண அறிவித்தல்

## இராமநாதன் (சின்னையர்) கனகநாதன்

(மண்டைதீவு)



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிட மாகவும் கொக்குவில் பொற்பதி வீதி 106-ம் இலக்க இல்லத்தில் வசித்த வருமான இராமநாதன் கனகநாதன் 20.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரிகை பற்றிய தகவல் பின்னர் அறியத் தரப்படும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(சி-5610)

**BELIC**
(English Courses)

- Spoken English (ஆங்கிலத்தில் சரளமாக பேச, வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு)
- Basic English (A/L, O/L பரீட்சையில் தோற்றியவர்களுக்காக)
- Professional English (பணிபுரிபவர்களுக்கானது)

ACS 1-ம் கட்டை சந்தி, பருத்தித்துறை.

உடனடி தொடர்பு: 0750435257, 0783035181 (7334)

க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கமைய 100% வரை Scholorship

After A/L O/L Engineering-USA ICTA Scholorship BIT University of Colombo

CIMA-UK Only Rs 14,400 Per Level University A/L Students } 50% Off

மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

UK, USA பல்கலைக்கழகங்களில் Master Degree Qualified Lectures Panel, Passing Guarantee, 12 Years Experience

Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo

MCS Supported By UNDP/JRRP 324, Palaly Road, Parameswara Junction

Free5 Course fee* Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

SMS Your name & Course to 772395895 & Get Scholorship

# மரண அறிவித்தல்

## திருமதி புஷ்பா கணேசலிங்கம்



(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி)

வேலணையைப் பிறப்பிடமாகவும், மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பதிலகவதி (புஷ்பா) கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி) நேற்று வெள்ளிக்கிழமை (20.01.2012) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், பிரபல சித்த வைத்தியர், வேலணை), உருக்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் (ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர், கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், வளர்மதி (கனடா), கலாநிதி அருள் (முன்னாள் விரிவுரையாளர் சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம், Solicitor, இலண்டன்), கலாநிதி சிவமதி (பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), வைத்தியகலாநிதி அருள்மொழி (குழந்தை வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி அருள்ராஜ் (முன்னாள் விரிவுரையாளர் விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்,இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

விவேகானந்தன் (கனடா), சுகுணா(இலண்டன்), சிவச்சந்திரன்( உதவித் திட்டமிடல் பணிப்பாளர், யாழ்.பிரதேச செயலகம்), வைத்திய கலாநிதி ஜானகி (உணர்வழியியல் நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி பார்பரா (இலண்டன்) ஆகியோரின் மாமியும், அர்ச்சனா, ஆராதனா, யதுஷன், அர்ச்சுனன், அஸ்மிதா, அஸ்வினி, அபிலாஷா, ஹர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும், புஷ்பராஜவதி (பேபி), பேராசிரியர் சிவச்சந்திரன் (முன்னாள் கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற புஷ்பரத்னவதி மற்றும் இராசமலர்( சோதி, அவுஸ்திரேலியா), சிவமலர், காலஞ்சென்ற பாலச்சந்திரன், மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோரின் மூத்த சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 72/27, பணிக்கர் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (22.01.2012) காலை 11.00 மணிக்கு நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

72/27, பணிக்கர் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.

சிவகிரி
மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்:
பிள்ளைகள்

(7332)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.